Registered as a News paper in Sri Lanka    பக்கங்கள்: 06    விலை ரூபா 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி

நாதம் 01    பிரமோதூத ஹூ வைகாசி மீ 3ஆம் வ    வியாழக்கிழமை    (17 - 05 - 1990)    ஹிஜ்ரி 1410    ஷவ்வா 21    ஓசை 88

## கல்முனையில் 19 பொலிசாரை புலிகள் விசாரணை செய்து விடுதலை!

(கல்முனை)

கல்முனைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பத்தொன்பது பொலிஸ்காரர்கள் நேற்று முன்தினம் மாலை வீதி வழியாகச் சென்றபோது விடுதலைப் புலிகளினால் விசாரணைக்காகக் கூட்டிச் செல்லப்பட்டனர். இரண்டு சப்இன்ஸ்பெக்டர்கள் உட்படப் பத்தொன்பது பொலிசாரும் விடுதலைப் புலிகளின் முகாமில் வைத்து விசாரணை செய்யப்பட்ட பின் நேற்று முற்பகல் விடுதலை செய்யப்பட்டனர் உதைபந்தாட்டப் பயிற்சியின் பின் அவர்கள் பொலிஸ் நிலையத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் அவர்கள் சென்று கொண்டிருந்த வீதிகள் அவர்கள் செல்ல வேண்டிய பாதையல்லவென்றும் அவர்களின் செயல்கள் சந்தேகத்துக்கிடமாக இருந்ததாலேயே விசாரணைக்காகக் கூட்டிச் செல்லப்பட்டதாகவும் புலிகள் தெரிவித்தனர்.

## 1 ரூபா 25 சதத்திற்கு 100 கிராம் பாண்

(கொழும்பு)

பாண் தயாரிப்பதில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண உணவுஅமைச்சு நடவடிக்கைஎடுத்துள்ளதும்

இதன் முதல் நடவடிக்கையாக கொழும்பு மாநகரில் இம்மாதம் 26ஆம் திகதி முதல் நூறுகிராம் பாண் விநியோகிக்கப்படவுள்ளது. இதன் விலை ஒருரூபா இருபத்தைந்து சதமாகும். சுமார் ஒரு லட்சம் இந்தப்பாண் சந்தைப்படுத்தும் திணைக்களத்தில் தயாரிக்கப்பட்டு விற்பனை நிலையங்கள் மூலம் விற்கப்படுமென உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமராச்சி தெரிவித்துள்ளார்.

## இலங்கை வந்த மிராஜ்-2000இல் ஆபத்தான ஆயுதம் எதுவும் இல்லையாம்

(டில்லி)

யாழ். குடாநாட்டின் மீது ஜூன் 1987இல் தாழ்வாகப் பறந்து உணவுப் பொதிகளை வீசிய சரக்கு விமானங்களுக்குப் பாதுகாப்புத் துணையாக வந்த பிரான்ஸ் நாட்டுத் தயாரிப்பான மிறாஜ்-2000 விமானங்களில் ஆபத்தான ஆயுதம் எதுவும் பொருத்தப்படவில்லையாம். அந்த விமானங்களில் வழமையான பீரங்கி மாத்திரம் பொருத்தப்பட்டிருந்ததாக இந்தியாவின் கட்டுப்பாட்டு அதிகாரியும் கணக்காளர் நாயகமும் இந்திய பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். மிராஜ் 2000 விமானங்களில் பொருத்தப்பட்டிருக்க வேண்டிய நீண்ட தூர ஆர். 500 டி ஏவுகணையும், விமான ஓடுபாதைகளை தகர்க்கக்கூடிய பி. ஏ. பி. 100 குண்டும் பொருத்தப்பட்டிருக்கவில்லை என்றும், இதற்குக் காரணம் இந்த ரக ஆயுதங்கள் அப்போது பயிற்சிக்கோ அல்லது யுத்த நடவடிக்கைகளுக்கோ இந்தியாவில் இருக்கவில்லையாம். 1987 இறுதியில்தான் இந்தியா இவ்வாயுதங்களைப் பெறக்கூடியதாக இருந்தது. இவ்வாறு அந்த அறிக்கை கூறுகிறது.

## நீண்ட நாட்களின் பின் குண்டுவீச்சு விமானங்கள்

(வசந்தபுரம்)

நீண்டநாட்களின்பின் வடபகுதி வானத்தில் இலங்கை விமானப்படையின் குண்டுவீச்சு விமானமொன்று சுற்றி வட்டமிட்டுச் சென்றதை நேற்று நண்பகலில் பார்வையிட்டமக்கள் ஆச்சரியம்கலந்த திகிலடைந்தனர். மீண்டும் பாதுகாப்புக் குழிகள் வெட்டவேண்டி ஏற்படுமோ என்று பலரும் பேசிக்கொண்டனர். வவுனியா, தர்மபுரம், விஸ்வமடு ஆகிய பகுதிகளில் வானில் சுற்றிப் பறந்த குண்டுவீச்சு விமானம் யாழ்ப்பாணப் பகுதியிலும் வானில் பறந்து திரும்பிச்சென்றது.

கொழும்பில் நேற்று (6ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு சர்வகட்சி மாநாட்டை விடுதலைப் புலிகள் பகிஷ்கரிக்குமா?

## சாரணர் பாசறை

(மன்னார்)

சாரணர் பாசறை ஒன்று முருங்கன் மகாவித்தியாலயத்தில் மன்னார் மாவட்ட சாரணர் பயிற்சி ஆணையாளர் திரு. எஸ். என். குரூஸ் தலைமையில் நடைபெற்றது

வங்காலை சென்.ஜோண்ஸ் மகாவித்தியாலய மாணவர்கள் 53 பேரும், முருங்கன் மகாவித்தியாலய மாணவர்கள் 60 பேரும் கலந்து கொண்டு தத்தமது சாரணர் கொடிகளை ஏற்றினர்.

முருங்கன் பங்குத்தந்தை வண. பிதா செபஸ்தியாம்பிள்ளை அடிகள் மன்னார் மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பொறுப்பாளர் திரு. சுரேஷ் நானாட்டான் பிரதேச பொறுப்பாளர் திரு. ரவி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

## ரயில்வே அதிகாரிகள் 10பேர் இடைநிறுத்தம்

(கொழும்பு)

ரயில்வே திணைக்களம் பத்து அதிகாரிகளை கடமையிலிருந்து இடைநிறுத்தம் செய்துள்ளது.

இரு ரயில்நிலைய பொறுப்பதிகாரிகள் ரிக்கற் பணம் மோசடி செய்ததாக கண்டு பிடிக்கப்பட்டு இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

பொதுமக்களுடன் மரியாதைக் குறைவாக நடந்து கொண்ட மூன்று அதிகாரிகளும் விசாரணையின் பின் இடைநிறுத்தம் செய்யப்பட்டனர்.

சில தினங்களாக ரயில்கள் தாமதமாக சேவையில் ஈடுபட்டது தொடர்பாக ஐந்து

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.ஆர்.எல்.எவ். - அரசு பேச்சையடுத்து புதிய அணுகுமுறை பற்றி பரிசீலனை

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் நடைபெற்று வரும் சர்வகட்சி மாநாட்டை பகிஷ்கரிப்பது குறித்து விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமைப்பீடம் பரிசீலனை செய்து வருவதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. சர்வகட்சி மாநாட்டில் இதுவரை காலமும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் பார்வையாளர்களாக கலந்து கொண்டார்கள். ஈ. பி. ஆர். எல். எவ், தலைவர்களுடன் ஸ்ரீலங்கா அரசு பேச்சுக்களை ஆரம்பித்திருப்பதும், சர்வகட்சி மாநாட்டிற்கு அரசு முக்கியத்துவம் அளிக்க முடிவு

## கல்லடி, கும்முறுமுனை முகா[illegible]ளும் மூடப்படலாம்

([illegible]ட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கல்லடி, கும்முறு

படையினர் முகாம்களை மூடுவதற்கு முன்னோடி வேலைகளைச் செய்து வருகின்றனர்.

கொடிகளை ஏற்றினர்.

முருங்கன் பங்குத்தந்தை வண. பிதா செபஸ்தியாம் பிள்ளை அடிகள் மன்னார் மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பொறுப்பாளர் திரு. சுரேஷ் நானாட்டான் பிரதேச பொறுப்பாளர் திரு. ரவி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

## ரயில்வே அதிகாரிகள் 10பேர் இடைநிறுத்தம்

(கொழும்பு)

ரயில்வே திணைக்களம் பத்து அதிகாரிகளை கடமையிலிருந்து இடைநிறுத்தம் செய்துள்ளது.

இரு ரயில்நிலைய பொறுப்பதிகாரிகள் ரிக்கற் பணம் மோசடி செய்ததாக கண்டு பிடிக்கப்பட்டு இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

பொதுமக்களுடன் மரியாதைக் குறைவாக நடந்து கொண்ட மூன்று அதிகாரிகளும் விசாரணையின் பின் இடைநிறுத்தம் செய்யப்பட்டனர்.

சில தினங்களாக ரயில்கள் தாமதமாக சேவையில் ஈடுபட்டது தொடர்பாக ஐந்து

(6ஆம் பக்கம் பார்க்க)

## கலா தம்பிமுத்துவும் நேற்றுக் காலை மரணம்

(கொழும்பு)

சூட்டுக்காயத்தில் படுகாயமடைந்த திருமதி கலா தம்பிமுத்து நேற்று அதிகாலை ஐந்து மணிக்குக் காலமானார் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு. சாம் தம்பிமுத்து கடந்த ஏழாம் திகதி திருமதி கலாவுடன் கொழும்பிலுள்ள கனடாத்தூதரகத்துக்குச்சென்ற போது தூதரகவாயிலில் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டதும் இச்சம்பவத்தில் திருமதி கலா படுகாயமடைந்ததும் தெரிந்ததே.

திருமதி கலா கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அவசர சத்திர சிகிச்சையின் பின்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு-யாழ்.இரவு பஸ்சேவை விரைவில் ஆரம்பமாகும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புக்கும்- யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான இரவு பஸ் சேவைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக போக்குவரத்துச் சபை உயர் அதிகாரி ஒருவர் ஈழநாதத்துக்கு தெரிவித்தார்.

இதேபோல கல்முனை- யாழ்ப்பாணம் பஸ் சேவையும் விரைவில் ஆரம்பமாகும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை இதனை நடாத்த முன்வந்திருப்பதால் மட்டக்களப்பு, கல்முனை டிப்போக்களும் இதனை நடாத்தவுள்ளதாகவும் அவர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## அபிவிருத்தி ஒப்பந்தங்கள் கிராமோதய சபைகளுக்கே

(கொழும்பு)

கிராமப்புறங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான ஒப்பந்தங்கள் இனிமேல் கிராமோதய சபைகளுக்கே வழங்கப்படவுள்ளது.

பொதுநிர்வாக உள்நாட்டு, மாகாணசபைகள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா இதற்கான நடவக்கைகளை மேற் கொண்டுள்ளார்.

தனியார் துறை ஒப்பந்தக்காரருக்கு இவை இனிமேல் வழங்கப்படமாட்டாது எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அபிவிருத்தித் திட்டங்கள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## காற்றடித்த பம்புடன் சைக்கிளில் வந்தவர் ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

சைக்கிளுக்கு காற்று அடிப்பதற்காக மிகப் பணிவாக பம்பை கேட்டவர் காற்று அடித்ததுடன் பம்புடன் மறைந்துவிட்டார்.

நேற்று யாழ் பலாலி வீதியில் உள்ள ஒரு சிறிய கடையில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. துவிச்சக்கரவண்டிக்கு காற்று போய்விட்டது என மிகவும் பணிவாக வந்து கேட்டு பம்புவை வாங்கி

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.ஆர்.எல்.எவ். - அரசு பேச்சையடுத்து புதிய அணுகுமுறை பற்றி பரிசீலனை

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் நடைபெற்று வரும் சர்வகட்சி மாநாட்டை பகிஷ்கரிப்பது குறித்து விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமைப்பீடம் பரிசீலனை செய்து வருவதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. சர்வகட்சி மாநாட்டில் இது வரை காலமும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் பார்வையாளர்களாக கலந்து கொண்டார்கள். ஈ. பி. ஆர். எல். எவ், தலைவர்களுடன் ஸ்ரீலங்கா அரசு பேச்சுக்களை ஆரம்பித்திருப்பதும், சர்வகட்சி மாநாட்டிற்கு அரசு முக்கியத்துவம் அளிக்க முடிவு செய்திருப்பதும் விடுதலைப் புலிகள் வட்டாரத்தில் அதிருப்தியை கொடுத்திருக்கிறது. இதனால் இம் மாநாட்டை பகிஷ்கரித்து அரசின் போக்கிற்கு ஆட்சேபணை தெரிவிக்க புலிகள் இயக்கம் விரும்புவதாகத் தெரியவருகிறது-

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் சிங்கள அரசுக்கும் மத்தியில் நேரடியாக நடைபெற்று வந்த பேச்சுக்கு முக்கியத்துவம் அளிப்பதை தவிர்க்கும் முகமாகவே சர்வ கட்சி மாநாட்டிற்கு முக்கியத்துவம் வழங்க அரசு விரும்புவதாகவும், இதன் காரணமாகவே ஈ. பி. ஆர். எல். எவ். விற்கு இம்மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகவும் கொழும்பிலுள்ள அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இதற்கிடையில் விடுதலைப் புலிகள் விடுத்த இரு முக்கிய கோரிக்கைகளை அரசு தட்டிக் கழித்து வருகிறது. மாகாண சபையை உடன் கலைத்து தேர்தலை நடத்துவது ஆறாவது சட்டத்திருத்தத்தை நீக்குவது ஆகிய கோரிக்கை

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதங்களை வைத்திருக்கிறோம் என்பதால் ஆதரவு தருவது தவறு

- ராஜன்

(விசேட நிருபர்)

"நாம் ஆயுதத்தை வைத்திருக்கிறோம் என்ற காரணத்திற்காக எமக்கு ஒத்துழைப்புத்தர நினைத்தால் அது தவறானதாகும். அன்றியும் அந்த நிலைமை நிரந்தரமானதும் இல்லை என்பதை நாமறிவோம். இதனால் நாட்டுக்கோ, எமக்கோ, உங்களுக்கோ, பொதுமக்களுக்கோ நன்மை இல்லை என்பதையும் நீங்கள் உணர வேண்டும்"

நேற்று (16. 5. 90) காலை யாழ்- மனோகராத் திரையரங்கில் நடைபெற்ற வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கப் பொதுக் கூட்டத்தில் கலந்து சிறப்புரை நிகழ்த்திய தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அமைப்பாளர் திரு. ராஜன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கூட்டம் சங்கத் தலைவர் திரு. சு. இராசேந்திரம் தலைமையில் நடைபெற்றது. தொடர்ந்து பேசுகையில்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மதுவரிச்சட்டத்தைத் திருத்த அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

மதுவரி சட்டத்தை திருத்தியமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதன்படி ஐயாயிரம் ரூபா அபராதத் தொகை ஒருலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

அத்துடன் ஆறுமாத கடுங்

(6ஆம் பக்கம் பார்க்க)

# விசமத்தனமான பிரச்சாரங்கள் மூலம் மக்களை குழப்பத்தில் ஆழ்த்த முயற்சி

- தினேஷ்

(வவுனியா)

வவுனியாவில் அண்மையில் நிலவிய பதட்ட நிலையை அடுத்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அரசியற் பொறுப்பாளர் தினேஷ் அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

அவ் அறிக்கையின் விபரம் பின்வருமாறு: திட்டமிட்ட ரீதியில் தீய சக்திகளால் விஷமத்தனமான வதந்திகளை மக்கள் மத்தியில் பரப்பி விட்டு மக்களைக் குழப்பமான சூழ் நிலைக்கு ஆளாக்குவது மட்டுமன்றி அந்த பதட்ட சூழ் நிலையைப் பயன்படுத்தி துரோகத்தனங்களில் ஈடுபட சிலர் முயற்சி செய்கின்றனர்.

எனவே இத் தீய சக்தியின் வதந்தியை நம்பாது அனைத்து விடயங்களையும் நிதானமாக, அவதானமாகக் கவனிப்பதுடன் கடந்த காலத்தில் ஏற்பட்ட ஒவ்வொரு விடயங்களையும் பாடமாகக் கொண்டு எதிர் காலத்தில் ஒரு நிரந்தரமான நிம்மதிக்காவும், சமாதானத்திற்காகவும் அனைத்து தமிழீழ மக்களும் உழைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

இன்றைய சமாதானம் ஒரு நிரந்தரமான சமாதானம் அல்ல அத்தகைய நிரந்தர சமாதானம் ஏற்பட

(6ஆம் பக்கம் பார்க்க)

## கல்லடி, கும்முறுமுனை முகா[illegible]ளும் மூடப்படலாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கல்லடி, கும்முறுமுனை ஆகிய இடங்களிலுள்ள ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள் இரண்டொரு தினங்களில் மூடப்படவுள்ளன இதற்கேற்ப இங்குள்ள படையினர் முகாம்களை மூடுவதற்கு முன்னோடி வேலைகளைச் செய்து வருகின்றனர்.

இதேசமயம் நேற்றுடன் மட்டக்களப்பு கல்முனை வீதியில் உள்ள களுவாஞ்சிக்குடி முகாம் முற்றாக மூடப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பு-யாழ்ப்பாணம் இணைப்பு ரயில் சேவை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - யாழ்ப்பாணம் இணைப்பு ரயில் சேவையை 1983க்கு முன்னர் இடம் பெற்றதுபோல மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ரயில்வே பகுதி அத்தியட்சகர் திரு ஆர். எம். திலகரட்னா உறுதியளித்துள்ளார்.

முன்னர் யாழ் இரவு தபால் ரயிலில் மட்டக்களப்புக்கு என பிரத்தியேக பெட்டி இணைக்கப்பட்டு அது மாகோவிலிருந்து மட்டக்களப்பு செல்லும் ரயிலில் இணைக்கப்பட்டது.

அதேபோல மட்டக்களப்பிலிருந்து பகல் சரக்கு ரயிலில்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியில் சிக்கி வயோதிபா காயம்

(முல்லைத்தீவு)

நாயாற்றுப் பகுதியில் கால் நடைகளைத் தேடிச் சென்ற (வயது 69) வே. கதிரவேலு மிதிவெடியில் சிக்கிக் கால் ஒன்றை இழந்த சம்பவம் கடந்த திங்களன்று இடம் பெற்றது.

இச் சம்பவத்தைக் கேள்வியுற்ற தமிழீழ விடுதலைப்புலிகள் முல்லைப் பிரதேசப் பொறுப்பாளர் மனோ கருத்துத் தெரிவிக்கையில்;

அன்னிய ஆதிக்கச் சக்திகளின் அடிச்சுவடுகள் இன்ன

(6ஆம் பக்கம் பார்க்க)

## எட்டு ஊழியர்களுக்கு ஒரு மேசை; ஒரு கதிரை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிறுகைத் தொழில் சபை அலுவலகத்தில் எட்டு அலுவலக உத்தியோகஸ்தர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர்; இவர்களுக்கு தற்போது ஒரே ஒரு மேசையும் ஒரே ஒரு கதிரையும் மட்டுமே கிடைத்துள்ளது இந்த ஒரு மேசையையும் ஒரு கதிரையையும் வைத்துக் கொண்டு தாம் சுழற்சிமுறையில் இருந்து பணியாற்றி வரு

(6ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாடு சென்றவர்களின் இரத்தம் ஏற்கப்படாது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரியில் உள்ள இரத்த வங்கியில் வெளிநாடு சென்று திரும்பியவர்களின் இரத்தம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக ஒருவரின் இரத்தம் கொழும்புக்கு அனுப்பப்பட்டு சோதனையிட்ட பின்பே இது ஏற்றுக்கொள்ளப்படும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஆங்கிலத் தட்டெழுத்தாளர் தேவை

சிறந்த ஆங்கில அறிவும், அனுபவமும் உள்ள பெண் தட்டெழுத்தாளர் தேவை. 22 - 05 - 1990 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும். ''கிளீன் கட்'' இல. 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(B/960)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வன் கிருஷ்ணபிள்ளை சிவானந்தன் (ஆனந்தன்)**

(அத்தியார் இந்துக்கல்லூரி மாணவன்)

| தாயின் மடியில் | வானத்தின் பிடியில் |
|---|---|
| 08-08-1968 | 17-05-1989 |

இதயத்தில் இனிமையாக என்றும் இளவேனிற் காலமாக
இசைபாடித் திரிந்த இனியவனே எம் ஆனந்தா!
எமையெல்லாம் தவிக்கவிட்டுத் தென்திசை
புகுந்தனையோ!
எம்மை நீ பிரிந்ததினால் உற்றதுணை யாருளரோ?
வானரக்கூட்டம் வதைத்ததனால் வானகம் சென்றாயோ?
கூற்றுவனும் உன்னுயிரைக் கூசாமல் கவர்ந்தானோ?!
மன்னர்க்கு மன்னா மதிவதனா தன்னிகரில்லாப்
பெருந்தகையே ஆனந்தா!
நின்னைப் பிரிந்ததனால் நாமெல்லாம்
நிலைகொள்ளாது வாடுகின்றோம்.

உனது ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கும்

அம்மா, அய்யா, அக்காமார், அண்ணன்மார்,
ஆச்சி, மாமாமார், மாமிமார், மச்சாள்மார்,

## மாதர் சங்கத்தின் பணிக்கு அரசாங்க அதிபர் பாராட்டு

(கிளிநொச்சி)

கடவுள் எல்லா இடமும் இருக்க முடியாது என்பதனால்தான் தாய்மாரைப் படைத்தான். தாய்க்குலத்தின் சேவைக்கு ஈடான சேவை உலகத்தில் வேறு எதிலுமே காணமுடியாது.

முரசுமோட்டை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருத்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு கூறினார்.

நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம், கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் சதா தனபாலசிங்கம், திருமதி தம்பிராசா ஆகியோர் மங்கள விளக்கை ஏற்றினார். சுவாமிகளின் ஆசியுரையும் இடம்பெற்றது.

மேற்படி மாதர் சங்கத் தலைவி திருமதி சடாட்சரலெட்சுமி நல்லையா தலைமையில் நடைபெற்ற இவ்வைபதில் அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

ஆன்றோர்கள் பெண்களைத் தெய்வமாகக் கண்டார்கள். பெண்களின் சேவை தன்னலமற்றது. தூய்மையானது. சங்கம்மருவிய காலம்தொட்டு இன்றுவரை தாய்க்குலத்தின் சேவைக்கு ஒப்பாக வேறு எவரின் சேவையையும் கூறமுடியாது.

முரசுமோட்டை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பணியை அரசாங்க அதிபர் என்ற முறையில் என்னால் போற்றாமல் இருக்க முடியாது. இச்சங்கம் சமய அறிவை வளர்ப்பதற்காக சமய அறிவுப் போட்டியையும், ஆங்கில அறிவை வளர்ப்பதற்காக ஆங்கிலப் போட்டியையும், சுயதொழில் வேலை வாய்ப்பை ஊக்குவிக்க தையல் பயிற்சியையும், பன்னவேலைப் பயிற்சியையும், பெண்களுக்கு அழகுக் கலையை ஊட்டுவதற்காகக் கோலமிடும் போட்டியையும், மாலை கட்டும் போட்டியையும் நடாத்தியுள்ளது. இச்சங்கத்தைப் போன்று ஏனைய சங்கங்களும் கிராம மக்களுக்காகச் சேவை செய்ய வேண்டும் என்றார்.

## கல்கத்தாவில் 3 இலங்கையர் கைது!

(கொழும்பு)

போலி விஸா மற்றும் தஸ்தாவேஜ்களுடன் லண்டன் சென்ற மூன்று இலங்கையர்கள் கல்கத்தா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பம்பாய், பாங்கொக், டாக்கா வழிகளூடாக லண்டன் செல்லவிருந்த போது இச்சம்பவம் இடம் பெற்றது.

## வெங்காயம் இறக்குமதி கூ.மொ.வி.நி. நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் வெங்காயத்தின் விலை 50 ரூபாவுக்கும் மேல் சென்றுள்ளதோடு இதற்கு சில இடங்களில் தட்டுப்பாடும் நிலவுகிறது.

இதனையடுத்து கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் பெரியவெங்காயத்தை இறக்குமதி செய்துள்ளது.

ஆயிரத்து இருநூற்றி ஐம்பது மெட்ரிக் தொன் கையிருப்பில் இருப்பதாக கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய உயர் அதிகாரி தெரிவித்தார்.

இதே சமயம் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 17 ரூபா 50 சதத்துக்கு விற்கப்படுகிறது.

ஆனால் தனியார் கடைக ...

... விலையில் விற்கப்பட்டது தொடர்பாகஜனாதிபதி விசாரணைநடாத்த உத்தரவிட்டதுடன் சில ஊழியரும் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

வட பகுதியிலும் இம்முறை வெங்காயத்துக்கு பலத்த கிராக்கி ஏற்பட்டுள்ளதுடன் பலர் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தெற்கில் வெங்காயத்துக்கு பதிலாக லீற்ஸ் பயன்படுத்தப் படுவதாக தெரிவிக்கப் படுகிறது.

## இராஜாங்க அமைச்சர் டிப்போக்களுக்கு விஜயம்

(கொழும்பு)

நாட்டில் போக்குவரத்து ...

... போவதாகவும் கூறினார்.

இந்தியாவில் இருந்து இற ...

## சைவ நெறி தொண்டர் கழகம்

(நீர்வேலி)

மன்னார் மாவட்டத்தில் சைவ நெறித்தொண்டர் கழகம் ஆரம்பிக்கப்பட்டு கிராமத்துக்குக் கிராமம் கிளைகளும் ஆங்காங்கே ஆரம்பிக்கப்பட்டு செயலாற்றி வருகின்றது.

மேற்படி கழகம் கோயிற்குளம், புதுக்குளம், கூராய் இலுப்பைக் கடவை, உயிலங்குளம், வட்டக்கண்டல், அடம்பன் ஆகிய பகுதிகளில் சுமார் முன்நூற்றுக்குமதிகமானவர்களுக்கு உரியமுறைப்படி சமயதீட்சையும் வைத்துள்ளது இப்பகுதிகளில் மக்களிடையே சமய அனுட்டானங்களையும் வளர்க்கும் பணியில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

திருக்கேதீஸ்வரம் மகாதுவட்டாமணி மண்டபத்தில் அலுவலகம் அமைத்து நடைபெற்று வரும் இக்கழகம் மேற்படி மண்டபத்தில் வாரம் இருமுறை பண்ணிசை வகுப்பும் சமயவகுப்பும் நடாத்தி வருகின்றது.

## நிர்வாகக் குழு கூட்டம்

(அம்பாறை)

கல்முனை உத்தியோகத்தர்கள் களரியின் நிருவாகக்குழுக் கூட்டம் 20ஆம் திகதி மேற்படி களரியில் நடைபெறும்.

கடந்த பல வருடங்களாக மேற்படி களரிக் கட்டிடம் பாதுகாப்புப் படைகளின் முகாமாக இருந்ததாலும் அப்பகுதிக்கு பொதுமக்கள் போக முடியாத நிலையிருந்ததாலும் களரி செயற்படாமல் இருந்தது.

தற்போது களரி கவனிப்பாரற்றுக் கிடப்பதால், களரியின் நிருவாகம் கூடி இயங்க வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு முன்னோடியாகவே நிருவாகக் குழுக் கூட்டம் நடாத்தப்பட விருப்பதாக களரியின் சாலைச் செயலாளரான திரு. என். கந்தசாமி தெரிவித்தார்.

(48)

## யாழ்நகரில் இன்றைய சினிமா

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30. 4-00,
6.30 & 9.30
**BRUCE LEE IN RUCELEE THELEGEND**
கராட்டிப் படம்

**வெலிங்டன் (யாழ்)**
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30, 2-30,
6-30, 9-30
**நிலவே மலரே**
(புதிய பிரதி)
B/859

**ஹரன் - (யாழ்)**
தினசரி 4·00, 7.00, 9.30
விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
நிழல்கள் ரவி. நம்பியார்.
சத்தியராஜ்
நடித்த
**விலங்கு**
இந்தியாவிலிருந்து
தருவிக்கப்பட்ட
(புதிய பிரதி)
B 878

**லிடோ (யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு காலை10-30
2-30 9-30
கமல், ரஜனி, ஸ்ரீதேவி
நடித்த
**16 வயதினிலே**
(B/860)

**ராஜா (யாழ்)**
தினசரி 4·45, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில்
10 00, 2·00, 4·45,
7·00, 9·45
**EDDIE MURPHY IN BEVERLY HILLS COP**
( Color - Scope )

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4 00, 6.30
7.00 9.00
சனி ஞாயிறுவிடுமுறை
நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00
7-30 9-00
**UNMASKING THE IDOL**
(Color)

## சேவை நலன் பாராட்டு விழா

(சுதுமலை)

''தமக்கு எத்தனை துன்பங்கள், அசௌகரியங்கள் ஏற்பட்டாலும் கூட மக்களுக்கு செய்யவேண்டிய சேவையினை அவ்வப்போதே செய்து வருபவர்களை, செய்தவர்களை நாம் எப்போதும் மறந்துவிடக் கூடாது.

நாம் இதனை மறப்போமேயானால் பொதுவாழ்க்கை, பொதுச்சேவை என்ற இலட்சியங்கள் அர்த்தமற்றதாகி விடும்.

இவ்வாறு கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் நடைபெற்ற சேவைநலன் பாராட்டு விழாவில் மேற்படி சங்க பொது முகாமையாளர் திரு. சி. சிவபாலசுப்பிரமணியம் தலைமை தாங்கி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சங்கத்தின் தலைவர் இயக்குனர் சபை உறுப்பினர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டு பாராட்டுரை வழங்கினார்கள்

சேவை நலன் பாராட்டு விழாவில் கௌரவிக்கப்பட்டவர்கள் விபரம் வருமாறு:-

திருமதி ப. மகேஸ்வரன், திருமதி கு. பூபாலபிள்ளை, திருமதி பு. லட்சுமிதேவி, திருவாளர்கள் சு. கனகசபாபதி, நா. கனகரத்தினம், செ. இராமநாதன், ச. அ. சகாயராசா, நா. சு. மகாலிங்கம் ஆகியோரே.

(19)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

(அத்தியார் இந்துக்கல்லூரி மாணவன்)

தாயின் மடியில் 08-08-1968 | வானத்தின் பிடியில் 17-05-1989

இதயத்தில் இனிமையாக என்றும் இளவேனிற் காலமாக
இசைபாடித் திரிந்த இனியவனே எம் ஆனந்தா!
எமையெல்லாம் தவிக்கவிட்டுத் தென்திசை
புகுந்தனையோ!
எம்மை நீ பிரிந்ததினால் உற்றதுணை யாருளரோ?
வானரக்கூட்டம் வதைத்ததனால் வானகம் சென்றாயோ?
கூற்றுவனும் உன்னுயிரைக் கூசாமல் கவர்ந்தானோ?!
மன்னர்க்கு மன்னா மதிவதனா தன்னிகரில்லாப்
பெருந்தகையே ஆனந்தா!
நின்னைப் பிரிந்ததனால் நாமெல்லாம்
நிலைகொள்ளாது [illegible]ம்.

உனது ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கும்
அம்மா, அய்யா, அக்காமார், அண்ணன்மார்,
ஆச்சி, மாமாமார், மாமிமார், மச்சாள்மார்,
மச்சான்மாருடன் உன் நண்பன்.
நீர்வேலி வடக்கு.

(B/959)

விலை 50 ரூபாவுக்கும் மேல் சென்றுள்ளதோடு இதற்கு சில இடங்களில் தட்டுப்பாடும் நிலவுகிறது.

இதனையடுத்து கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் பெரியவெங்காயத்தை இறக்குமதி செய்துள்ளது.

ஆயிரத்து இருநூற்றி ஐம்பது மெட்ரிக் தொன் கையிருப்பில் இருப்பதாக கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய உயர் அதிகாரி தெரிவித்தார்.

இதே சமயம் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 17 ரூபா 50 சதத்துக்கு விற்கப்படுகிறது.

ஆனால் தனியார் கடைகளில் இது ஐம்பது ரூபாவரை விற்கப்படுகிறது.

சடந்தசித்திரை புதுவருடத்திற்கு இந்த வெங்காயம்கூடிய

ரணைநடாத்த உத்தரவிட்டதுடன் சில ஊழியரும் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

வட பகுதியிலும் இம்முறை வெங்காயத்துக்கு பலத்த கிராக்கி ஏற்பட்டுள்ளதுடன் பலர் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தெற்கில் வெங்காயத்துக்கு பதிலாக லீற்ஸ் பயன்படுத்தப் படுவதாக தெரிவிக்கப் படுகிறது.

ரற்றுக்கிடப்பதால், களரியின் நிருவாகம் கூடி இயங்க வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு முன்னோடியாகவே நிருவாகக் குழுக் கூட்டம் நடாத்தப்பட விருப்பதாக களரியின் சாலைச் செயலாளரான திரு. என். கந்தசாமி தெரிவித்தார்.

(48)

வருபவர்களை, செய்தவர்களை நாம் எப்போதும் மறந்துவிடக் கூடாது.

நாம் இதனை மறப்போமேயானால் பொதுவாழ்க்கை, பொதுச்சேவை என்ற இலட்சியங்கள் அர்த்தமற்றதாகிவிடும்.

இவ்வாறு கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் நடைபெற்ற சேவைநலன் பாராட்டு விழாவில் மேற்படி சங்க பொது

குனர் சபை உறுப்பினர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டு பாராட்டுரை வழங்கினார்கள்

சேவை நலன் பாராட்டு விழாவில் கௌரவிக்கப்பட்டவர்கள் விபரம் வருமாறு:-

திருமதி ப. மகேஸ்வரன், திருமதி கு. பூபாலபிள்ளை, திருமதி பு. லட்சுமிதேவி, திருவாளர்கள் சு. கனகசபாபதி, நா. கனகரத்தினம், செ. இராமநாதன், ச. அ. சகாயராசா, நா. சு. மகாலிங்கம் ஆகியோரே.

(19)

# இராஜாங்க அமைச்சர் டிப்போக்களுக்கு விஜயம்

(கொழும்பு)

நாட்டில் போக்குவரத்து சேவைகள் நவீனமயப்படுத்தப்படவுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் எல். எம். பரூக் தெரிவித்தார்

வீதிகள் நவீனமுறைப்படுத்தப்படுவதுடன் ரயில், பஸ் சேவைகளும் நவீனமயப்படுத்தப்படும் என்றும் அவர் சொன்னார்.

நாட்டின் சில பஸ்டிப்போக்களுக்கு நேரடியாக தற்போது விஜயம் மேற்கொண்டு வரும் அமைச்சர் இங்குள்ள பிரச்சினைகளை கண்டறியப் போவதாகவும் கூறினார்.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பஸ் உதிரிப்பாகங்கள் தற்போது டிப்போக்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

சில தினங்களுக்கு முன்னர் அவர் இரு டிப்போக்களுக்கு விஜயம் செய்தபோது சில உத்தியோகத்தர்கள் இல்லாமையைக்கண்டு பிடித்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும்படியும் உத்தரவிட்டுள்ளார்.

# ராஜீவும் ஆந்திராவை விமானத்தில் பார்வையிட்டார்

(ஹைதராபாத்)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியும் சில குழுவினரும் ஆந்திரமாநிலத்தில்புயல்வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடத்தை விமான மூலம் பார்வையிட்டனர்.

கடந்த வாரம் ஆந்திர மாநிலத்தில் ஏற்பட்ட புயல்வெள்ளம் காரணமாக இறந்தவர்களின் எண்ணிக்கைஐநூறுக்கும் மேல் என மதிப்பிடப்பட்டுள்ளது.


சகலவித இயந்திர தேவைகளுக்கு...

# யூரோவீல்

## பொறியியலாளர்கள் நிர்மாணிகள்

[ஸ்கைலார்க்]

449, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

*For Your*
*Oil Expellers,*
*Wet Rice Grinding Mills,*
*Fibre Mills*
*or any other kind of*
*custom built machinery*
*&*
*Equipment*

B-946


கேள்வி விண்ணப்பம் மூலம்
பாவித்த லொறி பொடி (LORRY BODY)

## விற்பனை


எமது சங்கம் பாவித்த லொறி பொடி கேள்வி விண்ணப்பம் மூலம் விற்பனைக்குண்டு. விண்ணப்பப் படிவத்தினை ரூபா 10/- செலுத்தி தலைமைக் காரியாலயத்தில் பெற்று 31 - 05 - 1990க்கு முன் பதிவுத் தபாலில் விண்ணப்பிக்கவும். கடித மேலுறையில் இடது பக்க மூலையில் 'பாவித்த லொறி பொடி விற்பனை' எனக் குறிப்பிடவும். சங்க வேலைநாட்களில் தலைமைக் காரியாலயத்தில் லொறி பொடியை பார்வையிடலாம். மீளளிக்கப்படும் வைப்புப் பணம் ரூபா 500/- செலுத்தப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்படுபவர் அறிவித்தல் கிடைக்கப் பெற்று 10 நாட்களுக்குள் முழுப்பணமும் செலுத்தி லொறி பொடியை வெளியே எடுத்துச் செல்ல வேண்டும்.

தலைவர்
கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம்
பரந்தன்.

(B/961)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**நடராசா ஜெயகரன் (இன்சூர்)**

வீர ஜனனம் 27 - 09 - 1971 | வீர மரணம் 17 - 05 - 1989

ஜெயம் உண்டு பயமில்லை என இருந்தோம்
ஜெயகரனை ஜெயித்துவிட்டான் அரக்கன்
வீட்டில் நீ இறந்திருந்தால்
வீட்டோடு போயிருக்கும் உன் பெயர் .- போர்
காட்டில் நீ இறந்ததனால் – தமிழ் ஈழ
ஏட்டில் பொறித்துவிட்டாய் உன் பெயரை!

உங்கள் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரங்கள்,
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்,
பொதுமக்கள்.
கோண்டாவில் வடக்கு.

(R/482)

# அமெரிக்கா - சோவியத் ஆயுதக் கட்டுப்பாடு

## இராஜாங்க அமைச்சர் ரஷ்யா விஜயம்

(மொஸ்கோ)

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜேம்ஸ்பேகர் ஆயுதக் கட்டுப்பாடு பற்றி மேலும் பேச்சு வார்த்தை நடாத்த மொஸ்கோ சென்றிருக்கிறார். அடுத்த மாதம் வாஷிங்டனில் நடக்கவிருக்கும் இரு நாடுகளினதும் ஜனாதிபதிகளின் சந்திப்புக்கு தடையாக இருக்கும் விடயங்களைப்பற்றி அமெரிக்காவின் இராஜாங்க அமைச்சர் ஜேம்ஸ்பேகர் சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வட் ஷெர்னாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

இவ்விரு ஜனாதிபதிகளுக்கும் இடையில் தடையாக இருக்கும் விடயங்கள் நெடுந்தூர ஏவுகணை கையிருப்பு குறைப்பு, இதர ராணுவ ஆயுதங்களின் எண்ணிக்கை குறைப்பு என்பனவாகும்.

மொஸ்கோவுக்கு புறப்பட முன்னர் திங்கட்கிழமை வாஷிங்டனில் ஜேம்ஸ்பேகர் பேசும் போது ஐரோப்பிய நாடுகளில் ஏவப்படும் அளவிற்கு அமெரிக்க துருப்புகள் தங்கியிருக்கும் என்றும் கிழக்கு ஐரோப்பாவில் இருந்து வெளியேற்றப்படும் சோவியத் துருப்புகளின் எண்ணிக்கைக்கு சமானமாக அமெரிக்காவும் தனது துருப்புகளை திருப்பி அழைக்கமாட்டாது என்றும் தெரிவித்திருக்கிறார்.

### பிலிப்பைன்ஸ் அரசாங்கம் மறுப்பு

ஆனால் பிலிப்பைன்ஸ் அரசாங்கத்தால் அமெரிக்காவிற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள இராணுவத் தளங்கள் இரண்டும் இதர வசதிகளும் திருப்பி எடுக்கப்படும் என்று பிலிப்பைன்ஸ் அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

1991 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் குத்தகைக் காலம் முடிவடையும் போது உடன்படிக்கை புதுப்பிக்கப்படமாட்டாது எனவும் கூறியிருக்கிறது.

இந்த இராணுவ தளங்களின் எதிர்காலம் பற்றிய பேச்சு வார்த்தைகள் மணிலாவில் நேற்று முன்தினம் ஆரம்பித்திருக்கிறது.

## புதிய அரசு ஆயுதங்கள் அழிப்பு

(நிக்கரகுவா)

முன்னாள் சாண்டினிஸ்டா அரசாங்கத்தின் சிவிலியன் ஆதரவாளர்களிடமிருந்து ஆயுதங்களை பறித்து அவற்றை அழிக்கும் நடவடிக்கைகளை நிக்கரகுவாவின் புதிய அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

கடந்த வாரம் ஆயுதக்கையளிப்பை ஆரம்பித்த அமெரிக்க சார்பு கொன்றா கிளர்ச்சியாளர்கள் சாண்டினிஸ்டா ஆதரவாளர்களிடம் இருந்து துப்பாக்கிகள் களையப்பட வேண்டும் என்று அரசாங்கத்தை கோரியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசியல் அமைப்புக் குழு நேபாளத்தில் கலைப்பு

(காட்மண்டு)

நேபாளத்தின் புதிய அரசியல் சாசனத்தை வரைவதற்கென கடந்த வாரம் உருவாக்கப்பட்ட குழுவை மன்னர் பிரேந்திரா கலைத்தார்

இடைக்கால அரசாங்கத்தோடு கலந்து ஆலோசிக்காமல் இந்த அரசியல் சாசனக் குழுவை மன்னர் கடந்த வாரம் நியமித்தமை நேபாள அரசியல் கட்சியில் பெரும் எதிர்ப்பை உருவாக்கியது.

புதிய குழுவொன்றை பிரதமர் கிருஷ்ண பிரசாத் பட்டாராய் விரைவில் அறிவிப்பார் என மன்னர் பிரேந்திரா தெரிவித்தார்.

அத்துடன் அரசியல் கட்சிகளின் எதிர்ப்பினை சமாளிக்க முடியாத அரசியல் சாசனக் குழுத் தலைவர் இத்தகைய எதிர்ப்புகளுக்கு மத்தியில் தான் செயற்பட முடியாது என்று தனது பதவியை இராஜினாமாச் செய்து உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பதினைந்து வருடங்களில் இந்தியஜனத்தொகை 143கோடி

(டில்லி)

இந்தியாவின் மக்கள் 2005ல் தொகை சுமார் 143 கோடியாக இருக்கும் என ஐக்கிய நாடுகள் சபையின் உலக மக்கள் சபைபற்றிய 1990 ஆம் ஆண்டிற்குரிய ஆய்வு கூறுகிறது.

இந்த எண்ணிக்கை முன்பு எதிர்பார்க்கப்பட்டதைவிட 21·6 கோடி அதிகமாக இருக்கும் என்றும் 21ஆம் நூற்றாண்டில் சீன மக்கள் தொகையை இந்திய மக்கள் தொகை கடந்துவிடும் என்றும் அந்த ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## சாவகச்சேரியிலும் விரைவில் வீதிக்கட்டுப்பாட்டாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகர்ப்பகுதியிலும் வீதிப் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்கள் மிக[illegible]

தப்பட உள்ளனர் என சாவகச்சேரி நகரசபை செயலாளர் திரு. நவரட்ணராசா தெரிவிக்கிறார்.

[illegible] ஒன்று இக்கடமையில் பணியாற்றும் என்றும் இவர்கள் யாழ்ப்பாண மாநகரசபையின் உதவியுடன் மாநகரசபைக்குட்பட்ட வீதிகளில் பயிற்சி அளிக்கப்படஉள்ளனர். மூன்று நாள் பயிற்சியின் பின்பு சாவகச்சேரி நகரவீதிகளில் தமது [illegible]

## மல்லாவி மகாவித்தியாலயத்தில் விஞ்ஞான ஆய்வு கூடம் இல்லை

(முல்லைத்தீவு)

மல்லாவி மகாவித்தியாலயத்தில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) மாணவர்களுக்கு பூரணபடுத்தப் பட்ட விஞ்ஞான ஆய்வு கூடம் இல்லாது மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை இப்பாடசாலை மாணவர்கள் சென்ற க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் திருப்தியான பரீட்சைப் பெறுபேறுகளைக் பெற்றுள்ளார்கள்

விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் நால்வர் நான்கு பாடங்களிலும் சித்தியடைந்துள்ளார்கள்.

கலை, வர்த்தக பிரிவுகளில் 16 பேர் சித்தியடைந்துள்ளார்கள்.

விஞ்ஞானம், விவசாயம் தொடர்பான ஆய்வு உபகரணங்கள் எதுவுமே இம் மகா வித்தியாலயத்தின் விஞ்ஞான ஆய்வு கூடத்தில் இல்லை.

(58)

## யோகபுரம் கொத்தணி விளையாட்டுப் போட்டி

(முல்லைத்தீவு)

யோகபுரம் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வலுநர் போட்டி இன்று 17ஆம் திகதி மல்லாவி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இவ்விளையாட்டுப் போட்டியை கொத்தணி அதிபர் எஸ். சிவராசா ஒழுங்கு செய்துள்ளார். விருந்தினராக யோகபுரம் உதவி அரசாங்க அதிபர், துணுக்காய், உ.அரசாங்க அதிபர், பாண்டியன் குளம் உ. அரசாங்க அதிபர், பிரதம பொறியிலாளர், முல்லைத்தீவுக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

யோகபுரம் கொத்தணியின் கீழ் உள்ள பதினைந்து பாடசாலைகள் இப் போட்டிகளில் கலந்து கொள்ளும்.

(58)

## முல்லைத்தீவில் சிறு தொழில் கடன்

(முல்லைத்தீவு)

முள்ளியவளையில் ஜனசக்திக் குடும்பங்களின் இளைஞர் - யுவதிகளுக்கான சுய தொழில் மூன்று நாட்கள் பயிற்சி வகுப்பு நேற்றுடன் முடிவடைந்தது. முல்லை மாவட்டத்திலிருந்து பல யுவதிகளும் இளைஞர்களும் இப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சி வகுப்புகளில் பங்கு பற்றியவர்களுக்கு முல்லைத்தீவு மக்கள் வங்கி உதவியுடன் சிறு கைத்தொழில் கடன் வழங்கப்படவுள்ளது.

(58)

## ஊ.சே.லாப நிதி வட்டி 11 வீதமாகக் குறைப்பு

(கொழும்பு)

ஊழியர் சேம லாப நிதிக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வந்த 13.வீதம் வட்டி 11.வீத மாகக் குறைக்கப்பட்டுள்ளது. இத் தகவலைத் தொழிற் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். 1988-ல் 13 வீதமாக இருந்த வட்டியில் 2.வீதம் கழிக்கப்பட்டதால் 1988 ல் ஊ.சே.லா நிதிக்கணக்கை ஆரம்பித்தவர்களுக்கு வருடாந்த வட்டி 11. வீதம்தான் வழங்கப்படுமாம்.

நடப்பு வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் ஊ.சே.லா நிதிக்கு வருடமொன்றிற்கு 10.வீத வருமான வரி அறவிடப்படவுள்ளது. இதனாலேயே 13 வீதமாகவிருந்த வட்டி 11.வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பு ஆஸ்பத்திரி குறையை நீக்க கருத்தரங்கு

(கோட்டைமுனை)

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியின் குறைபாடுகள், சீரமைப்பு தொடர்பாக நிர்வாகிகள், அரச அதிபர்கள் மட்டத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

இக் கலந்துரையாடலில் மட்டக்களப்பு அரச அதிபர், [illegible] பணிப்பாளர் வைத்திய அத்தியட்சகர், இருடாக்டர்கள் உட்பட விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த டேவிற், நித்தி, நீயூட்டன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலின் முடிவில் உடனடியாக ஆஸ்பத்திரிக்கான சேவையை ஓர் ஒழுங்குமுறை [illegible]

## கிராம அபிவிருத்திச் சங்கம் உதயநகரில் நிறுவப்பட்டது

(கிளிநொச்சி)

முற்று முழுதாக விவசாய மாவட்டமாக உள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் வாழுகின்ற மக்கள் தமது விவசாயச் செய்கை மூலம் ஏனைய மக்களை வாழவைத்து தாம் நலிவடைந்து வருகின்றனர்.

இந்த நிலையைப் போக்கிவறிய உழவர்களும் ஏனையோரைப் போல நல்ல நிலைக்கு வரமுயற்சிக்கவேண்டும்.

கிளிநொச்சி கிழக்கு உதயநகர் கிராம அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய சமூகசேவை உத்தியோகத்தர் திரு. பொன்நித்திய னந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

உதயநகர் கிழக்கு கிராம சேவையாளர் திரு. மு. சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்றஇந்தஅங்குரார்ப்பணக் கூட்டத்தில் திரு. பொன். நித்தியானந்தன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கிராமத்தின் வளர்ச்சியிலும், கிராம மக்களின் நல்வாழ்விலும் அக்கறையாக இருக்க வேண்டும்.

பயனுள்ள பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு கிராம மக்களுக்கு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து அம் மக்களின் வாழ்வை வளம்பெறச் செய்ய வேண்டும்.

சுயதொழில் வேலைவாய்ப்பிற்காக எமது அரசாங்க அதிபர் பணத்தை வழங்கவுள்ளார். வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகள் சமூக சேவை ஸ்தாபனங்கள் மூலம் அரசாங்க அதிபரால் வழங்கப்படும் பணத்தை பெற்று சுய தொழில்களை மேற்கொண்டு நல்ல நிலைக்கு வரவேண்டும்.

அதற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் உதவி செய்ய வேண்டும் என்றார்.

மேற்படி சங்கத் தலைவராக திரு. த. இராசரத்தினமும், செயலாளராக திரு. நா. சுந்தரலிங்கமும், பொருளாளராக திரு. அ. அற்புதநாதனும் தெரிவு செய்யப்பட்டனர். 7 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (49)

## புதிய முறையில் தாங்கிக்கு நீர் நிரப்பல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபை அலுவலக தேவைக்கெனபுதிய முறையில் கிணற்றிலிருந்து நீர் எடுக்கப்பட்டு நீர்த்தாங்கிக்குள் நிரப்பப்படுகிறது.

கடந்த இரண்டு மூன்றுநாட்களாக மாநகரசபை அலுவலகத்தில் உள்ள நீர்த் தாங்கிக்குப் பொருத்தப்பட்டிருந்த நீர் இறைக்கும் இயந்திரம் பழுதடைந்த காரணத்தால் தீயணைக்கும் வாகனத்திலுள்ள தாங்கிக்கு நீர் எடுக்கப்பட்டு அதிலிருந்து நீர்த்தாங்கிக்கு மாற்றப்பட்டு வருகிறது.

(லோ)

## முகாமைத்துவர் பயிலுனர் நியமனம்

(கோட்டைமுனை)

மட்டக்களப்பு மாவட்ட வீடமைப்பு நடவடிக்கைகளில் அரசஅதிபர் தீவிரகவனம்செலுத்தவுள்ளதாகத் தெரிகின்றது.

இதன் [illegible]மாக மாகாண[illegible]பைதிட்டத்தில்முகாமைத்துவ பயிற்சி பெற்ற 10 பட்டதாரிகள் மட்டக்களப்பில் உள்ள ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கும் ஒவ்வொருவர் வீதம்நியமிக்கப்[illegible]

## சமாஜப் பொதுக் கூட்டம்

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்ட சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜப் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணியளவில் மாங்குளம் மகா [illegible]

மல் இந்த அரசியல் சாசனக் குழுவை மன்னர் கடந்த வாரம் நியமித்தமை நேபாள அரசியல் கட்சியில் பெரும் எதிர்ப்பை உருவாக்கியது.

புதிய குழுவொன்றை பிரதமர் கிருஷ்ண பிரசாத் பட்டாராய் விரைவில் அறிவிப்பார் என மன்னர் பிரேந்திரா தெரிவித்தார்.

அத்துடன் அரசியல் கட்சிகளின் எதிர்ப்பினை சமாளிக்க முடியாத அரசியல் சாச

## பதினைந்து வருடங்களில் இந்தியஜனத்தொகை 143கோடி

(டில்லி)

இந்தியாவின் மக்கள் 2005ல் தொகை சுமார் 143 கோடியாக இருக்கும் என ஐக்கிய நாடுகள் சபையின் உலக மக்கள் சபைபற்றிய 1990 ஆம் ஆண்டிற்குரிய ஆய்வு கூறுகிறது.

இந்த எண்ணிக்கை முன்பு எதிர்பார்க்கப்பட்டதைவிட 21·6 கோடி அதிகமாக இருக்கும் என்றும் 21ஆம் நூற்றாண்டில் சீன மக்கள் தொகையை இந்திய மக்கள் தொகை கடந்துவிடும் என்றும் அந்த ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## சாவகச்சேரியிலும் விரைவில் வீதிக்கட்டுப்பாட்டாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகர்ப்பகுதியிலும் வீதிப் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்கள் மிக விரைவில் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர் என சாவகச்சேரி நகரசபை செயலாளர் திரு. நவரட்ணராசா தெரிவிக்கிறார்.

மூன்றுபேர் கொண்ட குழு ஒன்று இக்கடமையில் பணியாற்றும் என்றும் இவர்கள் யாழ்ப்பாண மாநகரசபையின் உதவியுடன் மாநகரசபைக் குட்பட்ட வீதிகளில் பயிற்சி அளிக்கப்படஉள்ளனர். மூன்று நாள் பயிற்சியின் பின்பு சாவகச்சேரி நகரவீதிகளில் தமது கடமையைத் தொடங்குவர் எனவும் அவர் தெரிவித்தார்.

பட்டுள்ளது. இத் தகவலைத் தொழிற் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். 1988-ல் 13 வீதமாக இருந்த வட்டியில் 2.வீதம் கழிக்கப்பட்டதால் 1988 ல் ஊ.சே.லா நிதிக்கணக்கை ஆரம்பித்தவர்களுக்கு வருடாந்த வட்டி வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் ஊ.சே.லா நிதிக்கு வருடமொன்றிற்கு 10.வீத வருமான வரி அறவிடப்படவுள்ளது. இதனாலேயே 13 வீதமாகவிருந்த வட்டி 11.வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பு ஆஸ்பத்திரி குறையை நீக்க கருத்தரங்கு

(கோட்டைமுனை)

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியின் குறைபாடுகள், சீரமைப்பு தொடர்பாக நிர்வாகிகள், அரச அதிபர்கள் மட்டத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில்மட்டக்களப்பு அரச அதிபர், பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய அத்தியட்சகர், இரு டாக்டர்கள்உட்பட விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த டேவிற், நித்தி, நீயூட்டன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலின் முடிவில் உடனடியாக ஆஸ்பத்திரிக்கான சேவையை ஓர் ஒழுங்குமுறைக்கு கொண்டுவருதல் என முடிவெடுக்கப்பட்டது.

மாற்றப்பட்டு வருகிறது.

(லோ)

## முகாமைத்துவர் பயிலுனர் நியமனம்

(கோட்டைமுனை)

மட்டக்களப்பு மாவட்ட வீடமைப்பு நடவடிக்கைகளில் அரசஅதிபர் தீவிரகவனம்செலுத்தவுள்ளதாகத் தெரிகின்றது.

இதன் [illegible] மாக மாகாண சபைதிட்டத்தில்முகாமைத்துவ பயிற்சி பெற்ற 10 பட்டதாரிகள் மட்டக்களப்பில் உள்ள ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கும் ஒவ்வொருவர் வீதம்நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

வேண்டும் என்றார்.


மேற்படி சங்கத் தலைவராக திரு. த. இராசரத்தினமும், செயலாளராக திரு. நா. சுந்தரலிங்கமும், பொருளாளராக திரு. அ. அற்புதநாதனும் தெரிவு செய்யப்பட்டனர். 7 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (49)

## சமாஜப் பொதுக் கூட்டம்

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்ட சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜப் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணியளவில் மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (58)

# பிரேமதாஸாவின் அரசும் 'றோவின்' வலையிலா?



ஆயிரம் இங்குண்டு ஜாதி எனில் அந்நியர்வந்து புகல் என்ன நீதி' என்று இந்திய விடுதலைப் போராட்டத்தின் போது வெள்ளையரைப் பற்றிப் பாடினார் மகாகவி பாரதியார்.

''ஆயிரம் இங்குண்டு பிரிவுகள் – எனில் அந்நியர் வந்து புகல் என்ன நீதி'' என்று கேட்டு அமைதிப்படை என்ற பெயரில் வந்த இந்தியப் படையை எதிர்த்துப் போரிட்டது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்.

1948ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து இலங்கைத் தமிழ் மக்கள் இரண்டாம்தரப்பிரஜைகளாக புறக்கணிக்கப்பட்டதுடன் அவர்களை அடக்கி ஒடுக்கி அடிமைகளாக்கும் நடவடிக்கைகளை ஆட்சி பீடத்துக்கு வந்த அரசாங்கங்களும் சிங்கள பௌத்த பேரினவாதிகளும்மேற்கொண்டு வந்தனர். தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசமான கிழக்கு மாகாணத்தில் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்தின் மூலம் அபகரிக்கப்பட்டு வந்தது.

### தமிழர் அகிம்சைப் போராட்டம்

தமிழ் மக்களை பாதுகாக்கவும் தமிழ் மண்ணை மீட்கவும் தமிழ்த் தலைவர்கள் நடாத்திய அகிம்சைப் போராட்டங்கள் ஆட்சி பீடத்துக்கு மாறிமாறிவந்த சிங்களப் பேரினவாதிகளால் ஆயுதப்படைகளின் துணை கொண்டு அடக்கப்பட்டதுடன் தமிழ் மக்களை அழிப்பதற்கு காலத்துக்குக் காலம் இனக் கலவரங்களும் தூண்டிவிடப்பட்டது.

இதே சமயம் தமிழ் மக்கள் மத்தியில் தமிழரசுக் கட்சி தமிழ்க் காங்கிரஸ் கட்சி என்று தமிழ்த் தலைமைக்கு நடந்த கட்சிப் போட்டிகளையும் ஆட்சிபீடத்துக்கு வந்த சிங்களப் பேரினவாதிகள் பயன்படுத்தி தமிழ் மக்கள் மத்தியில் பிளவை வளர்ப்பதற்கும் காரணமாயிருந்தனர்.

தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்களைப் பிளவுபடுத்தி அகிம்சைப் போராட்டங்களை நசுக்கி அவர்களை அடக்கி ஒடுக்கி அழித்தொழிக்கவும் தமிழ் மண்ணை அபகரிக்கும் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றவும் சிங்களப் பேரினவாதிகள் தீவிரமாகச் செயல்பட்டபோதுதான் தமிழ் இளைஞர்கள் தமிழ் மக்கள் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் வாழ்வதற்கு ஆயுதம் ஏந்தினர்.

### இந்தியாவின் பாதுகாப்பும் தமிழீழப் போராட்டமும்

தமிழ் மக்களின் போராட்டத்தை உன்னிப்பாகக் கவனித்து வந்த இந்தியா தனது பாதுகாப்பு நலனைக் கருத்தில் கொண்டு ''ஈழத்தமிழ் மக்களுக்கு உதவ' முன்வந்தது.

ஆயுதம் ஏந்திய தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதம் வழங்கிப் பயிற்சியுமளித்தது. தமிழ் இளைஞர்கள் ஒற்றுமையாக இருப்பதை இந்தியா தனக்கு ஆபத்தாக வரலாமென்றும் கருதியது. இதனால் பல்வேறு குழுக்களை அது வளர்த்தது. இந்தியாவை மட்டுமே சில குழுக்கள் நம்பியிருந்தன. குழு மோதல்கள் ஏற்பட்டன. இந்தப் போட்டியில் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கும் சுதந்திரத்துக்கும் கௌரவத்துக்கும் தமிழ் மண்ணை மீட்பதற்கும் என்று ஆயுதம் ஏந்தியவர்கள் அவற்றை மறந்து தமிழ் மக்களைப் பிளவுபடுத்தவும் தம்மை வளர்த்துக் கொள்ளவும் ஆயுதங்களையும் தாம் பெற்ற பயிற்சியையும் பயன்படுத்தத் தொடங்கின. இதற்கு இந்தியாவும் ஆதரவு கொடுத்தது.

இக்குழுக்களது நடவடிக்கைகள் தமிழ் மக்களின் வெறுப்பையும் எதிர்ப்பையுமே சம்பாதித்துக் கொடுத்தது. இதனால் இக் குழுக்கள் ஈழ மண்ணில் நிற்க முடியாமல் தமிழ் நாட்டிற்குத் தப்பியோடித் தஞ்சம் புகவேண்டியேற்பட்டது.

இந்த நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள நினைத்த ஜே. ஆர் அரசு தமிழ் மக்களை அழித்தொழித்துவிடலாமென நினைத்து வடக்கிலும் கிழக்கிலும் கடும் தாக்குதல்களை நடத்தின. விடுதலைப் புலிகளை அழித்துவிடலாமென்றும் அவர்களை அழித்துவிட்டால் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கிவிடலாமென்றும் ஜே. ஆர். அரசு நினைத்தது.

இது சுலபமான காரியமல்ல என்பதைப் புரிந்து கொண்ட அரசு தமிழ்ப் பகுதிகளுக்கு உணவுப்பொருள், எரிபொருள் தடைகளை ஏற்படுத்தி தமிழ் மக்களைபுலிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கச் செய்யவும் நினைத்தது. இதுவும் பலிக்கவில்லை.

இதே சமயம் தனது பாதுகாப்பையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருந்த இந்திய அரசு தமது சொல்லுக்கும் தமது விருப்பத்துக்கும் கட்டுப்பட மறுக்கும் விடுதலைப் புலிகளையும் தமது வழிக்குக் கொண்டு வரலாம் என நினைத்தது.

எஸ்·எம்·ஜி

### இலங்கை இந்திய ஒப்பந்தம்

ஜே. ஆரின் நோக்கமும் டில்லியின் நோக்கமும் ஒன்றாக இருந்ததால் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அவர்களின் சம்மதம் பெறாமலே இருதரப்பும் ஒப்பந்தம் செய்து கொண்டன.

இந்த ஒப்பந்தப்படி போராளிக் குழுக்களிடமிருந்து எழுபத்திரண்டுமணி நேரத்தில் ஆயுதங்களைக் களையவேண்டுமென்ற அம்சத்தை ஜே. ஆர் வலியுறுத்தினார். இந்தச் சமயத்தில் ஈழத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஈரோஸ் இயக்கமுமே இருந்தன.

விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களையவேண்டுமென்பதில் டில்லியும் இலங்கையும் மிகுந்த அக்கறை கொண்டிருந்தன.

விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களைவதில் அக்கறை கொண்ட டில்லி அதைச் செய்யுமாறு அமைதி காக்கவென இங்கு அனுப்பப்பட்ட இந்தியப்படைக்கு உத்தரவிட்டது.

இதே சமயம் ஈழமண்ணில் நிற்கமுடியாது தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்திருந்த குழுக்களுக்கு ஆயுதங்கள் வழங்கிப் பாதுகாப்புமளித்து இங்கே கூட்டி வந்தது அமைதிப்படை என்ற இராணுவம்.

ஆயுதங்களுடன் இந்தியப் படையின் பாதுகாப்புடன் வந்த குழுக்கள் விடுதலைப் புலிகளைப் பழிவாங்கவும் தமிழ் மக்களைப் பழிவாங்கவும் எத்தனித்தன.


விடுதலைப் புலிகளை அழித்தொழிக்க வேண்டுமென்பதில் டில்லியும் சிறீலங்காவும் ஒன்றுபட்டிருந்தன. இந்த வேலையை இதர தமிழ்க் குழுக்களைக் கொண்டு செய்வதே சுலபமென்றும் கருதின.

இந்தியாவின் இத்திட்டத்தை புரிந்துகொண்ட விடுதலைப் புலிகள் இந்திய வல்லரசைக் கண்டு அஞ்சவில்லை.

இந்தியஇராணுவத் தளபதியாக இருந்து ஓய்வு பெற்ற சுந்தர்ஜி, புலிகளின் ஆட்பலத்தையும் ஆயுத பலத்தையுமே கணிப்பிலெடுத்தோம் அவர்களின் மனோபலத்தைக் கணிக்கத் தவறிவிட்டோம்'' என்று சொன்னதுபோல புலிகளும் மனோவலிமையுடன் போராடி இந்தியப்படையை வெற்றிகொண்டதுடன் அவர்கள் கூட்டிவந்த குழுக்களையும் அவர்களுக்கு முன்பாகவே இங்கிருந்து அனுப்பியும் வைத்தனர்,

### றோவின் பங்கு

இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானதற்கும் இந்தியப்படையின் நடவடிக்கைகளுக்கும் கிழக்கு மாகாண



சபையில் டில்லியின் பொம்மை ஆட்சியை அமர்த்தியதிலும் இந்தியப் புலனாய்வுத் துறையின் பகுப்பாய்வுப் பிரிவான 'றோ' என்ற பிரிவுக்குப் பெரும் பங்கு உண்டு.

ஈழத்தில் ராஜதந்திர ரீதியிலும் இராணுவ ரீதியிலும் தார்மீகரீதியிலும் டில்லி அடைந்த தோல்வி வரலாற்றில் இந்தியாவுக்குப் பெரும் களங்கத்தை ஏற்படுத்திவிட்டது.

இத் தோல்வியை எப்படியாவது வெற்றியாகக் காட்டவும் களங்கத்தை நீக்கவும் இன்னமும் றோவும் இந்திய வெளிவிவகார அமைச்சும் பலவழிகளிலும் பாடுபட்டே வருவது தெளிவாகத் தெரிகிறது.

### கலைஞர் கருணாநிதியின் முயற்சிக்கு...

இந்தியாவின் பிரதமர் வி. பி. சிங் ஈழத்தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் பொறுப்பை தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியிடம் ஒப்படைத்தபோது அவர் தமிழ்க் குழுக்களை அழைத்துப் பேசிவந்தார்.

இப் பேச்சுவார்த்தையில் ஈ. பி. ஆர். எல். எவ். குழு திடீரென்று பத்தொன்பது அம்சக் கோரிக்கையை முன்வைத்துக் கலைஞரைத் திகைக்க வைத்ததுடன் அவரது முயற்சிக்கும் முட்டுக் கட்டைபோட்டது!

### பிரேமதாஸாவின் கோரிக்கை

இந்தியப்படை இங்கிருந்து வெளியேற வேண்டுமென்று ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் பகிரங்கமாகவே அறிவித்த இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா டில்லியுடன் இது சம்பந்தமாக வாதாடிக் கொண்டிருந்தார்.

இதே சமயம் அந்நிய இந்திய ஆக்கிரமிப்புப் படையை விரட்டியடிப்போம் என்று விடுதலைப் புலிகள் அவர்களுடன் போரிட்டுக் கொண்டிருந்தனர்.

'' ஆயிரம் இங்குண்டு பிரச்சினை – எனில் அந்நியர் வந்து புகல் என்ன நீதி?''

என்று பிரேமதாசாவும் புலிகளும் அந்நிய இந்தியப் படையை எதிர்த்து நின்றபோது இந்தியப் படையுடன் கூட்டிவந்து ஆயுதங்களும் கொடுத்து மாகாணசபையில் பொம்மை ஆட்சியை ஏற்

(5 ஆம் பக்கம் பார்க்க

உதவித் தாதியர் பயிற்சி நெறி

**TRAINING FOR NURSES AIDE**

19-5-90 இல் ஆரம்பமாகவுள்ளன

1. தகைமை வாய்ந்த பதிவுத்தாதியர்களால் (R. N. O) விரிவுரைகள் நடைபெறுகின்றன
2. பதினெட்டு மாதகால பாடத்திட்டங்கள் ஆறுமாதகால செய்முறைப் பயிற்சிகள்
3. செய்முறைப் பயிற்சிகள் யாவும் யாழ்நகரின் பிரபல்யம் வாய்ந்த வைத்தியசாலையில் நடைபெறுகின்றன
4. அரச அங்கீகாரம் பெற்ற சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்
5. பாடத்திட்டங்கள் யாவும் தமிழ் மொழிமூலம் போதிக்கப்படுகின்றன
6. இலவச "அக்குபங்சர்" பயிற்சிகள்

உங்கள் பதிவுகட்கு:-

அதிபர்

Dr. V. P. சுந்தரராஜன்

**சாயி மெடிக்கல் அக்கடமி**

இல 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

B.694)


## மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல் மாணவர்

(அம்பாறை)

பெரிய கல்லாறு உதயபுரம் தமிழ் வித்தியாலய மாணவனான சுப்பிரமணியம் சுதன் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே முதலாம் மாணவனாகச் சித்தியடைந்துள்ளார்.

மேற்படி பாடசாலையில் மற்றும் செல்வன் ப. கஜேந்திரன், செல்வன் ந. ராஜீவ், செல்வி கு. சுஜாதா, செல்வி ஆ. குமுதினி ஆகியோரும் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## தையல் பயிற்சி

(அம்பாறை)

பாண்டிருப்புக் கிராமத்தில் விடுதலைப்புலிகளால் நடத்தப்படும் தையல் பயிற்சிக்கு, பாண்டிருப்பு கிராமோதைய சபைத்தலைவர் திரு. என். கந்தசாமி தனது சொந்த நிதியில் ஒரு தையல் இயந்திரம் வாங்கி அன்பளிப்புச் செய்யவுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் பல இடங்களிலும் தையல் பயிற்சி நிலையங்கள் அமைக்க தான் உதவுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## மலேரியா நோய் பரவுகிறது

(அட்டாளைச்சேனை)

கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளில் மலேரியா நோய் தீவிரமாக பரவுவதாக சுகாதாரப்பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

ஒலுவில், பாலமுனை, நிந்தவூர் பகுதியில் இந்த நோய் தீவிரமாகப் பரவி பொது மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

கொதித்தாறிய நீரைப்பருகுவது மற்றும் சுகாதார முறைகளை கையாளுமாறும் தடுப்பு மருந்து போடுமாறும் பொது மக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

## ஆணையாளர் ஒருவருடபூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபையில் தற்போது சேவை ஆற்றி வரும் ஆணையாளர் திரு.வி. பி.பாலசிங்கம் அவர்கள் தமது சேவையைப் பொறுப்பேற்று நேற்று முன் தினத்துடன் ஒரு வருடம் பூர்த்தியானது.

இதனையிட்டு மாநகரசபை அலுவலக வளவில் அமைந்துள்ள பழம்பெருமை வாய்ந்த வைரவர் கோவிலில் விசேட பூசையும் நடைபெற்றது. இப்பூசையில் மாநகரசபை ஊழியர்கள் எல்லோரும் பங்குபற்றி


**LONDON EXAMS**

**Nov. / Dec. 90**

| | | ஆரம்பம்: |
|---|---|---|
| C. I. M. A. (LONDON) | Stage I | 02-06-1990 |
| I. D. P. M. (LONDON) | Part I | 02-06-1990 |
| A. A. T. (Sri Lanka) | Stage I | 02-06-1990 |
| I. A. B. (London) | FOUNDATION | 02-06-1990 |
| | INTER | 09-06-1990 |
| | FINAL | 09-06-1990 |

BASIC, d BASE III+, LOTUS 1, 2, 3
WORD PROCESSING பயிற்சிகள்
20 - 05 - 1990 முதல் ஆரம்பமாகின்றன.

For further details;

School of Business Administration

(London CIMA யினால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம்)

**16, 3rd Cross Street,**
(WEST OF O L R CHURCH)
**JAFFNA.**

Б-944

உங்கள் தேவைகளுக்கு ...

குளப்பிட்டியில் எங்கள் சேவை ...

நியாயமான விலையில் ...

- பலசரக்குச் சாமான்கள்
- பன்றி குட்ஸ்
- பழவகைகள்
- பிளாஸ்டிக் பொருட்கள்
- கால்நடைத் தீனிகள்
- பால்மா வகைகள்
- சாய்ப்புச் சாமான்கள்
- எரிபொருள்
- பல்ப்ஸ்
- கோழித் தீனிகள்

அனைத்தையும்

தரத்துடன், தரமான நிறையுடன் பெற்றுக்கொள்ள

நாடுங்கள்:

**சண்முகா சேல்ஸ் சென்ரர்**

குளப்பிட்டிச் சந்தி, கே. கே. எஸ். வீதி, கொக்குவில்.

(B-940)

வாகனங்களின் உரிமையாளர்களே!

உங்கள் தேவை... எங்கள் சேவை!

- உங்களது எந்த ரக வாகனங்களையும் மிகத் திறமையாக சுத்திகரிப்பு செய்து கொள்ள எங்களை நாடுங்கள்.
- சகல விதமான மசகு எண்ணெய் விற்பனையாளர்கள்
- தொழிலில் அனுபவம் - நிறைந்த நம்பிக்கைக்குரியவர்கள்

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்!

விபரங்களுக்கு;

**பீ. எஸ். சேர்விஸ் ஸ்ரேசன்**

**257/1, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்.**

(B/945)

* பழவகைகள்
* பிளாஸ்டிக் பொருட்கள்
* கால்நடைத் தீனிகள்
* எரிபொருள்
* பல்ப்ஸ்
* கோழித் தீனிகள்

அனைத்தையும்

தரத்துடன், தரமான நிறையுடன் பெற்றுக்கொள்ள

நாடுங்கள்:

**சண்முகா சேல்ஸ் சென்ரர்**

குளப்பிட்டிச் சந்தி, கே. கே. எஸ். வீதி,

கொக்குவில்.

(B-940)


முறைகளை கையாளுமாறும் தடுப்பு மருந்து போடுமாறும் பொது மக்கள் எச்சரிக்கப் பட்டுள்ளனர்.

## ஆணையாளர் ஒருவருடபூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபையில் தற்போது சேவை ஆற்றி வரும் ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் அவர்கள் தமது சேவையைப் பொறுப்பேற்று நேற்று முன் தினத்துடன் ஒரு வருடம் பூர்த்தியானது.

இதனையிட்டு மாநகரசபை அலுவலக வளவில் அமைந்துள்ள பழம்பெருமை வாய்ந்த வைரவர் கோவிலில் விசேட பூசையும் நடைபெற்றது. இப்பூசையில் மாநகரசபை ஊழியர்கள் எல்லோரும் பங்குபற்றி சிறப்பித்தனர். (லோ)


ஒரு முறை விஜயம் செய்யுங்கள்!

விபரங்களுக்கு;

**பீ. எஸ். சேர்விஸ் ஸ்ரேசன்**

257/1, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்.

(B/945)



**இன்றைய நவநாகரிக டிசைன்களில்**

சகல மரத் தளபாடங்களும் விற்பனைக்கும் ஓடர்களுக்கும் செய்து கொடுக்கின்றோம்.

* அலுமாரி * ஷோக்கேஸ் * பிள்ளைத் தொட்டில் * கண்ணாடி அலுமாரி
* கட்டில் * பள்ளிக்கூட கதிரைகள் * குஷன் கதிரைகள் * கதிரை செற்றிகள்

இவற்றை ஓடர்கள் மூலம் தரமானதாகச் செய்து கொள்ளலாம்.....

**அத்துடன்:** * மர அரிவு வேலைகள் * வீட்டுக் கூரை வேலைகள் * சீவல் வேலைகள்

ஒப்பந்த அடிப்படையில் செய்து கொடுக்கின்றோம்......

**இவற்றுடன்:** * தீராந்திகள் * புற வெட்டுக்கள் * பலகைகள் * றீப்பைகள் * மாம்பலகை முதலியனவும் பல அளவுகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

# அங்குசபாச பிள்ளையார் மரக்காலை

**இல. 537, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

(B-942)

### சிந்தனைக்கு

தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்
ஏதப்பாடு அஞ்சுபவர்.

--திருக்குறள்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 17-05-90
தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208
த. பெ. எண். 05

## வடக்கு, கிழக்கு சட்டமும் ஒழுங்கும்

"வடக்கு கிழக்கு மாகாணங்களில் சட்டம், ஒழுங்கு நிலை நாட்டப்படவில்லை; அங்கு பொலிஸாரும் இராணுவமும் செயற்பட முடியவில்லை. பொலிஸாரும் இராணுவமும் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் தான் தங்கியிருக்க வேண்டியிருக்கிறது."

ஸ்ரீ லங்காவின் எதிர்க் கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினர் சமீபகாலமாக மேற்கண்டவாறு கூறி வருகின்றனர்.

அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சியினர் தொடுக்கும் குற்றச் சாட்டுக்களில் இவை முக்கிய இடம்பெறுகின்றன.

ஆட்சி அதிகாரப் போட்டிக்காக ஸ்ரீ லங்காவில் நடைபெறும் போராட்டம் இதுவென்று நாம் ஒதுக்கித்தள்ளி விடலாம்.

ஆனால் இந்தப் பிரச்சினை வடக்கில், கிழக்கில் அதாவது தமிழ்பேசும் மக்களின் வாழ்வைப் பொறுத்த விஷயமானதால் நாம் 'சும்மா' இருந்துவிட முடியாது.

இந்திய அமைதிப்படை என்ற பெயரில்வந்து வடக்கு கிழக்கு மாகாணங்களை இரண்டு வருடகாலம் இந்திய இராணுவம் ஆக்கிரமித்திருந்தபோது இப் பகுதியின் சட்டம் ஒழுங்கு பற்றி எதிர்க்கட்சியினர் ஏன் கவலை கொள்ளவில்லை?

இந்திய இராணுவம் இங்கே இருந்தபோது இலங்கை இராணுவத்தின் சில பிரிவுகளும் இங்கே இருந்தன. அப்போது அவர்கள் எப்படி இங்கே இருந்தார்கள்? யாருடைய பாதுகாப்புடன் அவர்கள் வெளியே நடமாடினார்கள்; அவர்கள் ஆயுதந்தரித்திருக்க அனுமதி இருந்ததா?

இக் கேள்விகளுக்கு எதிர்க் கட்சியினர் இனியாவது விடைகாண வேண்டும்.

இந்திய இராணுவம் இங்கு வருவதற்கு முன்னால் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு இங்கு அனுப்பப்பட்ட பொலிஸாரும் இராணுவத்தினரும் என்ன செய்தனர்?

கிழக்கு மாகாணத்துக்கு அனுப்பப்பட்ட விசேஷ அதிரடிப் படையினர் செய்தது என்ன; கிழக்கில் உருவாக்கப்பட்ட ஊர்காவல் படையினர் என்ன செய்தார்கள்?

கொக்கிளாய் பாடசாலையில் முகாமிட்ட ஸ்ரீ லங்கா இராணுவம் இன்னமும் அங்கிருந்து வெளியேறாததால் பாடசாலைக்கு அருகே குடியிருந்த மக்கள் அச்சத்தினால் அங்கிருந்து வெளியேறி முல்லைத்தீவுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களுக்குக்

# அணு ஆயுதங்களை நோக்கி ஓடும் மூன்றாம் உலக நாடுகள்

பெரும் வல்லரசுகளுக்கிடையிலான போராட்டம் 3ஆம் உலக நாட்டுத்தலைவர்களைக் கடந்த நான்கு ஐந்து சகாப்தங்களாக ஆத்திரமடையச் செய்துள்ளது. வல்லரசுப் போட்டிகள் மனித வர்க்கத்திற்கும், குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளுக்கும் பல இன்னல்களை விளைவித்து வந்துள்ளன. பிராந்திய முரண்பாடு, வடக்கு கிழக்கு ஏற்றத் தாழ்வு, ஆயுதப் போட்டி ஆகியவற்றிற்குக் காரணம் வல்லரசுகளுக்கிடையிலான போராட்டம் என்பது 3 ஆம் உலகத்தின் கருத்தாகும்.

இக் கருத்து பெருமளவிற்குச் சரியானதே ஆனால், வல்லரசுகளின் சகாப்தமும் முடிவடையும் நிலையில் உள்ளது. போட்டிகளுக்கும் பூசல்களுக்கும் காரணமாயிருக்கும் பிராந்தியங்களிலிருந்து வல்லரசுகள் வெளியேறிக் கொண்டிருக்கின்றன. ஒரு காலத்தில் வல்லரசுகளில் பலப்பரீட்சைக்குக் காரணமாயிருந்த இந்து சமுத்திரம் இப்போது அந்நிலையிலிருந்து மாற்றமடைந்துள்ளதாக இந்தியப் பகுப்பாய்வு, பாதுகாப்பு நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளரான கே. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

"பார் ஈஸ்ட் எக்கொணமைக் றிவீப் ஏப்பிரல் 19- இதழில் கே. சுப்பிரமணியம் பின்வருமாறு தெரிவிக்கிறார். "இந்து சமுத்திரம் பல வழிகளில் இந்தியாவுக்கு முக்கியமானது. என்றாலும், நாம் முன்பு பயந்தது போல் அல்லது அது வல்லரசுகளின் அதிகாரப் போட்டியின் மையம் என்ற நிலை இன்று மாறி விட்டது.

### சிற்றரசுகளுக்கிடையே போட்டி

இப்போது உள்ள நிலைமைகளை அவதானித்தால் வல்லரசுகளின் அதிகாரப் போட்டிகளினால் இப்பிராந்தியத்தின் அமைதிக்குப் பங்கம் ஏற்படுவதில்லை. மாறாக பலம் வாய்ந்த சிற்றரசுகளுக்கிடையில் ஏற்படும் பூசல்களே மூன்றாம் உலக நாடுகளின் அமைதியின்மைக்கான காரணமாகும். முன்பெல்லாம் 3 ஆம் உலக நாடுகளுக்கிடையிலான பூசல்கள் மிகத் தணிவானவையாகவே காணப்பட்டன. பிரச்சினைகள் நாடுகளின் எல்லைகளையும் பிராந்தியத்தையும் மீறி வராமலிருந்தன. ஆனால் இந்த நாடுகள் சிலவற்றிடம் குறுந்தூர ஏவுகணைகள் கைவசமுள்ளனமூன்றாம்உலக நாடுகள் சில அணுவாயுதங்களையும் வைத்துள்ளன. உண்மையில், இன்று சக்திவாய்ந்த சிற்றரசுகளுக்கிடையில் ஏற்படும் போட்டி பூசல்களால் உலக சமாதானத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

### அஹிம்சையும் ஆயுதபலமும்

அஹிம்சை மார்க்கத்தை அரசியல் கோட்பாடாகக் கொண்டுள்ள நாடுகளும்இந்த அதிகாரப் போட்டியிலிருந்து நழுவிவிடத்தயாராகவில்லை. முன்பு வல்லரசுகளின் நடவடிக்கைகளை கண்டித்து வந்த நாடுகளும் எதிர்காலத்தில் ஆயுத பலப்பரீட்சையிலிருந்து விலகிக் கொள்ளும் நிலையில் இல்லை.

உதாரணமாக இந்தியாவை எடுத்துக் கொள்ளுவோம். புவியியல் அரசியல் மாற்றங்களுக்கு அமைய இந்தியாவின் எதிர்காலத்தை சுப்பிரமணியம் விவரிக்கும் போது, இந்தியா பல்லின, பலசமய, பல மொழிகளைப்பேசும் சுதந்திர எண்ணம் கொண்ட நாடு என்கிறார். ஆனால் அயல் நாடுகள் இந்தியாவின் போக்குகளுடன் ஒத்துப் போகாமலிருக்கலாம். அயல் நாடுகளில் வாழும் கற்றறிந்தவர்கள் இந்தியாவின் முன்னேற்றம் தமது நாடுகளில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் எனக் கருத இடமுண்டு. அயல் நாடுகள் பரந்த ஜனநாயகப் போக்கை தழுவிக் கொள்ளும் வரை இந்தியாவுக்கு எதிரான நிலை நீடிக்கவே செய்யும் என்று இந்திய தரப்பில் கருதப்படுகிறது.

இக் காலப் பகுதியில் அபரிமிதமான மேற்கத்திய ஆயுதங்கள் இப் பிராந்தியத்தில் அதிகரித்துக் காணப்படும். பாகிஸ்தானிடமும், மத்திய கிழக்கிலும் ஏவுகணைகளும், ஆயுதங்களும் காணப்படுகின்றன. சீனா அதன் இராணுவத்தை நவீனமயமாக்கி வருகிறது. இந் நிலையில் அவதானத்துடன் இந்தியா அடியெடுத்து வைக்காவிடில் அயல் நாடுகள் ஆபத்தைக் கருதாத துணிகரமான செயல்களில் இறங்கக் கூடும்.

அமெரிக்காவும், ரஷ்யாவும் தமது அணு ஆயுதங்களைக்குறைக்காவிடில், உலகம் முழுவதும் அணுவாயுதங்கள் பலத்தின் சின்னமாகக் கருதப்படும். இந்தியாவின் அணுவாயுதங்கள் கைவசமுள்ளன என்ற பாகிஸ்தானின் உணர்வு பாகிஸ்தானையும்அணுவாயுதபாணியாக்கும், இந்தியாவும் பாகிஸ்தானைச் சமாளிப்பதற்காக தனது படைக் கலத்தையும், அணுவாயுதங்களையும் நவீனமயமாக்கித் தனது இராணுவ பலத்தை அதிகரிக்க வேண்டியேற்படும் என்று சுப்பிரமணியம் கருதுகிறார்.

இந்திய பகுப்பாய்வு பாதுகாப்பு நிறுவனத்தின் முன்னாள்பணிப்பாளரான சுப்பிரமணியத்தின் கருத்துக்களை நாம் புறக்கணித்து விட முடியாது. சுப்பிரமணியத்தின் திட்டங்களுக்கமைய இந்தியா தனது இராணுவ பலத்தை என்றுமில்லாதவாறு விஸ்தாரமாக்கிப்பலப் படுத்திவருகிறது அணு நீர்மூழ்கிகள் பிரிதிவி அக்கினி ஆகிய இந்தியத் தயாரிப்புகளான ஏவுகணைகள் இதற்கான உதாரணங்களாகும்.

மூன்றாம் உலக நாடுகள் பிரத்தியேகமான அணுவாயுத ஏவுகணை குழுக்களிலிருந்து ஏன் விலகி இருக்க வேண்டும் என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறதுஆனால்இதே வேளை வல்லரசுகள் அணுவாயுத உற்பத்தியிலும் ஆயுத விநியோகத்திலும் தமது கவனத்தைச் செலுத்துகின்றன. வல்லரசு நாடுகள் நடந்த நான்கு சகாப்தங்களாகத் தமக்கிடையில் போர்களைத் தவிர்த்துக் கொண்டிருக்கின்றன.ஆனால் பலம் வாய்ந்த மூன்றாம் உலக நாடுகளான கொரியா, இந்தியா, பாகிஸ்தான்,ஈரான் ஈராக், எகிப்து ஆகிய நாடுகளும் நட்பு நாடுகளும் கடந்த நான்கு தசாப்தங்களில் பல முறை தமக் இடையில் சண்டையிட்டுள்ளன.

### இந்தியாவும் அணுவாயுதபலமும்

பங்களாதேஷ் யுத்தத்திற்குப்பிறகு இந்தியா தன்து அணுவாயுதபலத்தை ராஜஸ்தான் பாலைவனத்தில் பரீட்சித்துப் பார்த்தல் மூலம் விளம்பரப்படுத்தியுள்ளது. பாகிஸ்தானும் குறுந்தூர ஏவுகணைகளை வெற்றிகரமாகப் பரீட்சித்துள்ளதாக அறிவித்துள்ளது. பாகிஸ்தான் அணுவாயுதத்தைத் தயாரிக்கும் காலமும் வெகு தொலைவில் இல்லையாம்.

அஹிம்சை ஜனநாயகம் என்ற போர்வையில் இந்தியா அதன் இராணுவ பலத்தைப் பற்றி அலட்டிக் கொண்டிருக்கிறது. ஆனால் ஏனைய மூன்றாம் உலக நாடுகள் தமது கருத்தை ஒளிவு மறைவின்றி நேரிடையாகவே வெளிவிடுகிறார்கள். ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூசையின் தனது நாட்டை இஸ்ரேல் மிரட்டும் பட்சத்தில் அந்நாட்டின் மீது இரசாயன யுத்தத்தைத்தான் கட்டவிழ்த்துவிடப்போவதாக ஏப்ரல் 2ஆம் திகதியன்று குறிப்பிட்டுள்ளார். இஸ்ரேல் நாட்டில் சரி பாதியை அழிக்கக் கூடிய அளவிற்கு ஈராக்கிடம் இரசாயன ஆயுதங்கள் இருப்பதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் சுங்கப் பகுதியினர் அணுவாயுதம் தயாரிப்பதற்கான உபகரணங்களை ஈராக்கிற்கு அனுப்பும் சந்தர்ப்பத்தில் கண்டுபிடித்துள்ளார்கள். இதன் பிறகு தான் இஸ்ரேலை இரசாயன ஆயுதங்களால் அழிக்கப் போவதாக ஹுசெயின் அறிவித்தார். தன்னிடம் இரசாயனவாயுதங்கள் இருப்பதால், தனக் குஅணுவாயுதங்கள் தேவையற்றது என்ற பாவனையிலும்ஹூசையின் கருத்து வெளியிட்டுள்ளார். ஆனால், இரசாயன ஆயுதங்கள் சர்வதேச யுத்த நியதிகளின்படி சட்ட விரோதமானவை.

மேற்கு ஆசியாவில் சகல நாடுகளிடமும் பயங்கரமான ஆயுதங்கள் உள்ளன. இஸ்ரேல், லிபியா, எகிப்து, ஈராக், குவைத், வட கொரியா, தென் கொரியா ஆகிய அரசுகள் எல்லாம் ஏதோ ஒரு வகையில் குறுந்தூர ஏவுகணைகளையும், அணுவாயுதங்களையும் தம்வசம்வைத்துள்ளன. சீனா, பாகிஸ்தான் அப்படியே?

இப் பின்னணியில் இந்தியாவின் நிலைப்பாடும், அணுகுமுறையும் எப்படி அமையலாம்? சுப்பிரமணியத்தின் ஆலோசனைகளின் தர்க்க ரீதியான முடிவு இந்தியா ஆயுத பாணியாவதுதான். 3-ஆம் உலக நாடுகளில் தலைவிதியை நிர்ணயிக்கும் அளவிற்கு இந்தியாவின் பலம் எதிர் காலத்தில் அதிகரிக்க வழி வகுக்கிறது. சுப்பிரமணியத்தின் சிந்தனைகள் அவரின் அடிச்சுவடைய இந்தியாவும் அஹிம்சைஎன்ற போர்வையில்பின்பற்றுகிறது.

நன்றி: டெய்லி நியூஸ்

## வள்ளுவன் சனசமூக நிலைய 24வது ஆண்டு நிறைவு விழா

(வண்ணார்பண்ணை)

நாங்கள் கொண்டாடும் வைபவங்கள் விழாக்கள் போன்றவற்றின் தொடக்கத்தில் எம்மண்ணிற்காக உயிர் நீத்த தியாகிகளை நினைவு கூருதல் எமது கடமையாக நாம் எண்ணவேண்டும். இது தான் நாம் அவர்களுக்குச் செலுத்தும் நன்றியாகும்.

இவ்வாறு நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் வண்ணார் பண்ணை வடமேற்கு வள்ளுவன் சனசமூக நிலையத்தின் 24வது ஆண்டுவிழாநிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறி[illegible]ார்.

யாழ்மாநகரசபை ஆணையாளர் எஸ். பாலசிங்கம் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

மானிப்பாய்ப் பிரதேச மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் சங்கர் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார்.

செ. ஆனந்தன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கிராமசேவையாளர்கள் க. கந்தசாமி ப. வசந்தகுமார் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

திரு. நா. கனகராசா நன்றி தெரிவித்தார். (44)

னார்கள்; அவர்கள் ஆயுதந்தரித்திருக்க அனுமதி இருந்ததா?

இக் கேள்விகளுக்கு எதிர்க் கட்சியினர் இனியாவது விடைகாண வேண்டும்.

இந்திய இராணுவம் இங்கு வருவதற்கு முன்னால் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு இங்கு அனுப்பப்பட்ட பொலிஸாரும் இராணுவத்தினரும் என்ன செய்தனர்?

கிழக்கு மாகாணத்துக்கு அனுப்பப்பட்ட விசேஷ அதிரடிப் படையினர் செய்தது என்ன; கிழக்கில் உருவாக்கப்பட்ட ஊர்காவல் படையினர் என்ன செய்தார்கள்?

கொக்கிளாய் பாடசாலையில் முகாமிட்ட ஸ்ரீ லங்கா இராணுவம் இன்னமும் அங்கிருந்து வெளியேறாததால் பாடசாலைக்கு அருகே குடியிருந்த மக்கள் அச்சத்தினால் அங்கிருந்து வெளியேறி முல்லைத்தீவுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களுக்குத் தான் தெரியும் ஸ்ரீலங்கா அரசபடைகளினால் ஏற்பட்ட தொல்லைகளும் அனுபவித்த கஷ்டநஷ்டங்களும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த எம்.பிக்கள் பலரும் இந்த மாகாணங்களுக்கு வந்து செல்வதில்லை.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் வடக்கு. கிழக்கு மாகாண நிலைபற்றி என்னதான் சொன்னாலும் அதைமறுத்து உண்மை நிலையைச் சொல்லக்கூடியவர்கள் மிகமிகக்குறைவு.

ஸ்ரீலங்கா அரசபடையினால் அனுபவித்த இன்னல்கள் அமைதிப்படை வந்ததால் நீங்கிவிடும் எனக் கனவு கண்டார்கள்.

அமைதிகாக்கவென்று வந்தபடையின் அட்டூழியங்கள் சொல்லிலடங்கா. இந்தப்படையின் பாதுகாப்பில் வந்த குழுக்களின் அடாவடித்தனங்கள் இன்று நினைத்தாலும் நெஞ்சதிரும்.

இத்தனை துன்பங்களையும் அனுபவித்தபின் இப்பொழுதுதான் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்கள் நிம்மதியாக மூச்சுவிடுகிறார்கள்.

இதைக்குலைக்க வேண்டுமென்று எதிர்க்கட்சியினர் விரும்பலாம்; தமிழ்பேசும் மக்கள் விரும்பமாட்டார்கள்.

வடக்கு கிழக்கிலுள்ள இராணுவத்தையும் பொலிஸையும் திருப்பி அழைக்கவேண்டுமென்று அரசாங்கத்தை எதிர்க்கட்சியினர் கேட்டுக்கொள்வதே விவேகமான செயலாகும்!

இதன் பின்னரே இங்கு உண்மையில் சட்டமும் ஒழுங்கும் நிரந்தரமாக நிலவும்.

லது அது வல்லரசுகளின் அதிகாரப் போட்டியின் மையம் என்ற நிலை இன்று மாறி விட்டது.

**சிற்றரசுகளுக்கிடையே போட்டி**

இப்போது உள்ள நிலைமைகளை அவதானித்தால் வல்லரசுகளின் அதிகாரப் போட்டிகளினால் இப்பிராந்தியத்தின் அமைதிக்குப் பங்கம் ஏற்படுவதில்லை. மாறாக பலம் வாய்ந்த சிற்றரசுகளுக்கிடையில் ஏற்படும் பூசல்களே மூன்றாம் உலக நாடுகளின் அமைதியின்மைக்கான காரணமாகும். முன்

தவர்கள் இந்தியாவின் முன்னேற்றம் தமது நாடுகளில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் எனக் கருத இடமுண்டு. அயல் நாடுகள் பரந்த ஜனநாயகப் போக்கை தழுவிக் கொள்ளும் வரை இந்தியாவுக்கு எதிரான நிலை நீடிக்கவே செய்யும் என்று இந்திய தரப்பில் கருதப்படுகிறது.

இக் காலப் பகுதியில் அபரிமிதமான மேற்கத்திய ஆயுதங்கள் இப் பிராந்தியத்தில் அதிகரித்துக் காணப்படும். பாகிஸ்தானிடமும், மத்திய கிழக்கிலும் ஏவுகணைகளும்,

என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது ஆனால் இதே வேளை வல்லரசுகள் ஆணுவாயுத உற்பத்தியிலும் ஆயுத விநியோகத்திலும் தமது கவனத்தைச் செலுத்துகின்றன. வல்லரசு நாடுகள் நடந்த நான்கு சகாப்தங்களாகத் தமக்கிடையில் போர்களைத் தவிர்த்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் பலம் வாய்ந்த மூன்றாம் உலக நாடுகளான கொரியா, இந்தியா, பாகிஸ்தான், ஈரான் ஈராக், எகிப்து ஆகிய நாடுகளும் நட்பு நாடுகளும் கடந்த நான்கு தசாப்தங்களில் பல முறை தமக் இடையில் சண்

வைபவங்கள் விழாக்கள் போன்றவற்றின் தொடக்கத்தில் எம்மண்ணிற்காக உயிர் நீத்த தியாகிகளை நினைவு கூருதல் எமது கடமையாக நாம் எண்ணவேண்டும். இது தான் நாம் அவர்களுக்குச் செலுத்தும் நன்றியாகும்.

இவ்வாறு நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் வண்ணார் பண்ணை வடமேற்கு வள்ளுவன் சனசமூக நிலையத்தின் 24வது ஆண்டுவிழாநிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறி[illegible]ார்.

ஆரம்பித்து வைத்தார்.

மானிப்பாய்ப் பிரதேச மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் சங்கர் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார்.

செ. ஆனந்தன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கிராமசேவையாளர்கள் க. கந்தசாமி ப. வசந்தகுமார் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

திரு. நா. கனகராசா நன்றி தெரிவித்தார். (44)

# பிரேமதாஸாவின்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தி கலைஞர் கருணாநிதியின் சமரச முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டுக் குழப்பத்தை ஏற்படுத்தியதற்கெல்லாம் பின்னணியில் றோ என்ற உளவுப் பிரிவே நின்றதென்பது பகிரங்க இரகசியம்.

இவற்றில் தோல்வி கண்ட றோ இன்னமும் சளைக்கவில்லை.

ஈ. பி. ஆர் எல். எவ். தலைவரும் வடக்கு கிழக்கு மாகாணமுதலமைச்சராகவுமிருந்த வரதராஜப்பெருமாளை பேச்சுவார்த்தைக்கு வருமாறு இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா அழைப்பு விடுத்த போது பெருமாள் டில்லிக்குச் சென்று இந்தியப் பிரதமரையும் அமைச்சர்களையும் சந்தித்தார்.

**பெருமாளின் தலைமறைவு**

வடக்கு கிழக்கு மாகாண சபையை ஈழசோஷலிஸ அரசமைப்பதற்கு அரசியல்யாப்பை உருவாக்கும் அரசியல் நிர்ணய சபையாகப் பிரகடனப் படுத்தி விட்டுப் பெருமாள் இந்தியப் படை வெளியேறு முன்னரே தலை மறைவானார்

இந்தியப்படையுடன்கூடவே வந்து மாகாணசபையிலும் பாராளுமன்றத்திலும் கூட்டுச் சேர்ந்த குழுக்கள் இந்திய அந்நிய இராணுவத்துடன் கூட்டுச் சேர்ந்து கூடிக்குலாவின. இந்தியப்படை வெளியேறிக்கொண்டிருந்த சமயம் தமிழ் மக்களைக் கொலை செய்தும் கொள்ளையடித்தும் சமூகவிரோதச் செயல்களிலும் ஈடுபட்டன .

இன்னும் அந்த இருண்ட நாட்களைத் தமிழ் மக்கள் மறக்கவில்லை.

இந்நிலையில் தங்களையும் பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டும் என்று ஈ. பி. ஆர். எல். எவ். வற்புறுத்தி பேச்சுக்குச் சென்றிருக்கிறது.

இங்கும் பத்தொன்பது அம்சக்கோரிக்கையையே முன் வைத்திருக்கிறது.

**றோ சளைக்கவில்லை**

இந்தக் கோரிக்கையைத் தயாரித்தது றோ என்ற உளவுப்பிரிவுதான் என்பதும் பகிரங்க இரகசியம்.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் ஏற்பட்டுள்ள சுமுக உறவைக்குலைப்பதும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள அமைதியைக் குலைப்பதும் மீண்டும் இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையில் மோதலை ஏற்படுத்தி அதில் தோல்வியைக் குளிர் காயவைப்பதுமேறோவின்திட்டம்.

இதற்கு இலங்கை அரசு இடமளிக்கப்போகிறதா? றோவின் வலைக்குள் இலங்கை அரசும் சிக்கிக் கொள்ளப் போகிறதா?

மலையகத்தமிழரை நாடு கடத்தும் திட்டம் மகாயான தேரவாத பௌத்தச் சர்ச்சையின் மூலம் ஐப்பான் இலங்கை உறவைக் கெடுத்து ஜப்பானிய உதவி இலங்கைக்குக் கிடைக்காமல் செய்தல் ஆகியவைகளும் கூட றோவின் திருவிளையாடலாக ஏன் இருக்க முடியாது?

# தேசிய சேவைத் திட்டத்தின் கீழ் பல வேலைத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

தேசிய சேவை இளைஞர் மன்றம் தனது கிராம அபிவிருத்தி திட்டமான தேசிய சேவைத் திட்டத்தின் கீழ் பல வேலைத் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது.

இதன் ஒரு கட்டமாக கோப்பாய் தே[illegible]தல் தொகுதியில் உள்ள புத்தூர், ஊறணி வீதி திருத்தியமைக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டு அப்பகுதி இளைஞர்கள் சிரமதான மூலம் திருத்துகின்றனர்.

இவர்களுக்கு வேண்டிய நிதியுதவி உட்பட ஏனைய உதவிகளையும் செய்து தர தாம் தயாராக இருப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை தமதுவேலைத் திட்டங்களுக்கு, உரிய நிதி ஒதுக்கீடுகளை பாராளுமன்ற உறுப்பினர்கள் செய்து தரவில்லை எனவும் அந்த அதிகாரி கவலை தெரிவித்தார்.

# பதில் எதிர்க்கட்சி தலைவர்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பெல்கிரட் சென்றிருப்பதால் பதில் எதிர்க் கட்சித் தலைவராக அனுரா பண்டாரநாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

# திடீர்விஜயம்

(தம்பிலுவில்)

திருக்கோவில்- தம்பிலுவில் பகுதிப் பொறுப்பாளர் திரு மதன் இப்பகுதி அரசாங்க அலுவலகங்கள், பாடசாலைகள்என்பவற்றுக்கு திடீர்விஜயமொன்றை மேற்கொண்டார்.

சகல அலுவலகங்களினதும் குறைபாடுகள் பற்றி தெரிந்து அதனை தீர்ப்பதற்கான வழிவகைகளையும் நடவடிக்கைகளையும் மேற் கொள்வதாக அவர் கூறினார்.

மேலும் உரிய நேரத்திற்கு வேலைக்கு வரத்தவறிய ஊழியர்ளுக்கு உரிய நேரத்திற்கு வேலைக்கு சமுகமளிப்பதனை அவசியம் கடைப்பிடிக்கவேண்டுமெனக்கேட்டுக் கொண்டதுடன்மக்கள் தேவைகளை எதுவிதஇடையூறுமின்றி செயல்படுத்ததங்கள் சேவைகள் பயன்படவேண்டுமெனவும் ஆலோசனைகூறினார்.

# கிளிநொச்சியில் மூலவளம் ஆய்வுநூல் தயாராகிறது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட மூலவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு, அது சம்பந்தமான மூலவள ஆய்வு நூல் தயாரிக்கும் வேலையில் கிளிநொச்சிக் கச்சேரியிலுள்ள திட்டமிடல் பகுதியினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் பணிப்பின் பேரில் சகல மாவட்டங்களின் மூல வளங்களும் ஆய்வு செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

சகல அரச திணைக்களங்களின் ஒத்துழைப்புடனேயே இக் கைநூல் தயாரிக்கப்பட்டு வருகிறது. இம் மாத இறுதிக்குள் கைநூல் தயாரிக்கும் வேலைபூர்த்தியாகும்என உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. பவானி ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்தார்.

இந்த ஆய்வு நூலை அடிப்படையாகக் கொண்டே சகல மாவட்டங்களின் மூல வளங்களைப் பயன்படுத்தி எதிர் காலத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருப்பதாக அவர் தெரிவித்தார். (49)

# நாலாயிரம் ரூபா அபராதம்

மதுவெறியில் வாகனத்தைச் செலுத்திஇருபாதசாரிகளுக்கு காயம் ஏற்படுத்திய சாரதி ஒருவருக்கு நீர்கொழும்பு நீதிவான் திரு. என். மகேந்திரராஜா நாலாயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

# புனரமைப்பு தொடர்பான முக்கிய கூட்டம்

(கோட்டைமுனை)

நமளை 18 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட புனரமைப்பு தொடர்பான மூன்று விடயங்கள்பற்றிக்கொழும்பில் முக்கிய கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

இப் பேச்சுவார்த்தையில் கிழக்குக் கரைத்திட்டத்திலுள்ளடங்கும் மீன்பிடி அபிவிருத்தி, வாழைச்சேனை மீன்பிடித்துறைமுகம் தொடர்பாகவும் அரசாங்க அச்சகக்கட்டடத்தில் இராணுவம் இருத்தல் பற்றியும், பொரளை, கொட்டாஞ்சேனை அரிசியாலை பற்றியும் முக்கியமாகப் பேச்சுவார்த்தை நடைபெறும் எனத்தெரிகின்றது.

இக்கூட்டத்தில் புனர்வாழ்வு புனரமைப்பு சமூகத்துறை அமைச்சரின் செயலாளரும் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும் கலந்து கொள்வார்கள் எனத் தெரிகின்றது.

# நடன ஆசிரியை இல்லை

(முல்லைத்தீவு)

யோகபுரம், பாண்டியன் குளம் ஆகிய இரு கொத்தணிப் பாடசாலை அமைப்புகளுக்குக் கீழ் வரும் எந்தப் பாடசாலைகளிலும் நடன ஆசிரியை நியமிக்கப்படவில்லை.

இந்நிலை குறித்துப் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர். (58)

# கள்ளக்கடத்தல் அதிகரிப்பு

(கொழும்பு)

வடபகுதி கடல்பகுதியில்கடந்த மாதம் இரண்டு கோடி ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்கள் பிடிக்கப்பட்டதாக கடற்படை தலைமையலுவலகம் தெரிவித்தது.

கடந்த ஞாயிறு மாதகல் கடல் பகுதியிலும் , தலைமன்னார் கடல் பகுதியிலும் பல லட்சம் ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்கள் இலங்கைக்கு படகு மூலம் கொண்டு வரப்பட்ட போது கடற்படையினர் கைப்பற்றினார்கள்.

இவை தொடர்பாக நான்கு இந்தியர்கள் உட்பட பதினேழு பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அண்மைக் காலமாக கடத்தல் நடவடிக்கைகள் வட பகுதி கடல் பகுதியில் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஈழநாதம்

### புதிய உத்தியோகத்தர்

மட்டக்களப்பு மாவட்ட புனர்வாழ்வு புனர்நிர்மாணக் காரியாலயத்திற்கு பல புதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இதில் இரண்டு பொறியியலாளர்கள், ஒரு கணக்காளர் உட்பட இன்னும் பல உத்தியோகத்தர்கள் இடம் பெற்றுள்ளனர்.




# புலிகள் - கலைஞர் சந்திப்பை டில்லி ஆட்சி விரும்பவில்லை!

## றோவையும் அமைதிப்படையையும் பகிரங்கமாக கண்டிப்பதும் பிடிக்கவில்லையாம்

(சென்னை)

**தமிழீழ விடுதலைப் புலிகள் தூதுக்குழுவை தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி மத்திய அரசின் சம்மதம் பெறாமல் சந்தித்துப்பேசவிருப்பதை மத்திய அரசு விரும்பவில்லையென்றும் மத்திய உளவுப் பிரிவான 'றோ' பற்றியும் இந்திய அமைதிப்படை பற்றியும் கலைஞர் கருணாநிதி பகிரங்கமாகக் குறை கூறுவதையும் அரசு விரும்பவில்லையென்றும் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

தமிழக முதல்வர் மு. கருணாநிதியுடன் கதைப்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் சென்னைக்கு வர இருப்பதாக மத்திய அரசுக்கு தகவல் இல்லை என இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜரால் தெரிவித்தார்.

எனினும் உண்மை விபரங்களை தான் கேட்டறிந்து கொள்ளப்போவதாக அவர் சொன்னார். மத்திய அரசின் உளவுத் துறையான ''றோ'' பற்றி தமிழக முதல்வர் கருணாநிதியின் கருத்தை தாம் ஏற்க வில்லை என்பதை ஏற்கனவே ரதமர் வி. பி. சிங் தெளிவாக கூறியுள்ளார்.

மேலும் இந்திய அமைதி காக்கும் படை பற்றி முதல்வர் கூறிய கருத்தையும் பிரதமர் ஏற்கவில்லை. இவ்வாறு மத்திய அரசின் ஆட்சேபணைகளையும் மீறி தமிழக முதல்வர் கருணாநிதி இந்த வாரம் தமிழீழ விடுதலைப் புலிகள் தூதுக்குழுவை சந்திக்க ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது.

புலிகளுக்கு முதலமைச்சர் விடுத்துள்ளதாக கூறப்படும் அழைப்புப் பற்றி மத்திய அரசிற்கு இதுவரையும் தகவல் இல்லை. இலங்கைத் தமிழ் போராளிகளுடன் தமிழக முதல்வர் நேரடிப் பேச்சு நடத்துவதை டில்லியில் உள்ள ராஜ தந்திர வட்டாரங்கள் ஆதரிக்கவில்லை.

இந்திய அமைதிகாக்கும் படை வாபஸ் பெறுவதற்கு முன்னர் பல்வேறு தமிழ்ப் போராளிக் குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் பொறுப்பை முதல்வர் கருணாநிதியிடம் மத்திய அரசு ஒப்படைந்திருந்தது. ஆனால் இப்போது சூழ்நிலை மாறிவிட்டது. நாம் இப்போது 1989 செப்டெம்பரில் இல்லை என்று டில்லி வட்டாரங்கள் குறிப்பிட்டது.

மத்திய அரசின் பிரதிநிதி இடம் பெறாமல் இலங்கை போராளிக் குழுக்களுடன் முதல்வர் பேச்சுவார்த்தை நடத்துவது முறையாகாது. பேச்சு நடக்குமானால் இந்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் நடத்தப் படவேண்டும் என்றும் அவ் வட்டாரங்கள் கூறின.

## சாவகச்சேரி உ.அ.அ. பிரிவில் மகாநாட்டு மண்டபம்

(யாழ்ப்பாணம்)

சாவகசேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனை வளவில் மாநாட்டு மண்டபம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என யாழ். அரசாங்க அதிபர் திரு அன்ரன் அல்பிரட் தெரிவித்துள்ளார். சென்ற 14 ஆம் தி[illegible] சாவ[illegible] பாதிப்படைந்த கைதடி, நாவற்குழிப் பகுதிகளிலுள்ள கட்டிடங்கள், வீதிகள் என்பவற்றின் புனரமைப்புக்கு 9கோடி 30லட்சம் நிதி உள்ளூராட்சிச் சபையினால் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் இவை நடைமுறைப்படுத்தப் பட இருப்பதாக[illegible] யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

(ம)

## சம்பளம் வழங்க நடவடிக்கை

(வவுனியா)

ஆசிரியர் பயிலுனர்களாக நியமனம் பெற்றவர்களுக்கு சம்பளக் கொடுப்பனவுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

மேற்படி ஆசிரியர்களுக்கு கடந்த மாதம் சம்பளக்கொடுப்பனவு வழங்கப்படவில்லை இம்மாத முடிவில் இரு மாதங்களுக்கான சம்பளம் வழங்கப் படும் என்று வவுனியா கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (தி)

### மதுவரி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காவல் தண்டனை ஒரு வருடமாக அதிகரிக்கப்படவுள்ளது.

நிதியமைச்சரும் பிரதமருமான டி. பி. விஜயதுங்கா இந்த சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

சட்ட விரோதமாக மது பானம் தயாரிப்பதற்கு முன்னர் ஐயாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது, இது இனிமேல் ஒருலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேபோல மதுபானம் கடத்தும் வாகனம் நிறுத்தாமல் சென்றால் அதன் சாரதிக்கு ஐயாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படும்.

மதுபான விற்பனை நிலையங்களை திறக்கும் பூட்டும் நேரங்களை மீறுபவர்களுக்கும் ஐயாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படவுள்ளது.

### அபிவிருத்தி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிராமசேவகர்கள், கிராமிய மட்ட நிறுவனங்கள், பொது மக்கள் ஆகியோரிடையே ஆராயப்பட்டு தயாரிக்கப் பட வேண்டும் எனப் பொது நிர்வாக அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

பிராந்திய செயலாளர்கள் அலுவலகங்கள் கணக்குகளை வைத்திருப்பதற்கு திறைசேரி அங்கீகாரம் பெறப்படும்.

அத்துடன் கணக்கு நடைமுறைகளைச் சீர்படுத்தவும், அபிவிருத்தி நடவடிக்கைகளை திட்டமிடவும், சகல பிராந்திய செயலாளர்களின் அலுவலகங்களுக்கும் விரிவுரையாளர்கள், பொறியியலாளர்களின் சேவை வழங்கப்படும்.

### கொழும்பு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் சம்பந்தமாக எதுவித உருப்படியான நடவடிக்கையும் எடுக்காமல் அரசியல் வெறுமை நிலையை அரசாங்கம் திட்டமிட்டு நீடிப்பதும்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் தேசிய கழகம்

## முஸ்லிம் மக்களின் எதிர்காலம் பற்றி புலிகளுடன் பேசத் தீர்மானம்

(அம்பாறை)

வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களின் எதிர்கால அரசியல் பொருளாதார பாதுகாப்பு ஆகியவை சம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியுடன் பேசுவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் தேசிய கழகம் தனது செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுத்துள்ளது.

மேற்படி கழகத்தின் கல்முனைப் பணி மனையில் கழகத் தலைவர் ஜனாப் எம். எம். சலீம் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் அனைத்து செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இங்குகழகத் தலைவர் சலீம் உரையாற்றுகையில்:- 1965ம் ஆண்டிலிருந்து எமது கழகம் தமிழ் மக்களின் பல்வேறு அமைப்புக்களுடனும் இணைந்து செயற்பட்டு வந்துள்ளது - ஆனால் அந்த அமைப்புக்கள் பேச்சளவிலே முஸ்லிம் மக்களின் தேவைகளை, குறைகளை அனுதாபத்தோடு கேட்டனவே தவிர எந்தவொரு செயற்பாடுகளையும் உருப்படியாக நடைமுறைப்படுத்தவில்லை என்பது கடந்த காலங்களில் நாம் கண்டு கொண்ட உண்மையாகும்.

ஆனால், இந்த நிலைப்பாட்டுக்கு முற்றிலும் மாறாக விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ், முஸ்லிம் மக்களை இருகண்களாக மதித்து செயற்பட்டு வருவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்த நிலைப்பாட்டுக்கு அமைவாக வட, கிழக்கில் வாழ் முஸ்லிம் மக்களின் எதிர்கால அரசியல், பொருளாதார, பாதுகாப்பு ஆகியவை சம்பந்தமாக எமது முஸ்லிம் தேசிய கழகம் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதே எதிர்காலத்தில் எம் இரு சமூகத்திற்கும் நாம் செய்யும் புனித சேவையாகும் என்பதே எமதுநிலைப்பாடாகும்.

அதுமட்டுமல்லாமல் விடுதலைப் புலிகள் இயக்கம் அரசுடன் நடாத்தும் பேச்சுவார்த்தைக்கு இந்தநாட்டில் வாழும் முஸ்லிம் மக்கள் அனைவரும் பூரணஆதரவைநல்கவேண்டும் அத்தோடு புலிகள் மிகக் குறைந்த வேண்டுதலான, அரசியல் அமைப்புவேது திருத்தச் சட்டம், வட, கிழக்கு மாகாண சபையைக் கலைத்து தேர்தல் நடாத்துவது வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களின் பூரண பாதுகாப்பு ஆகியவற்றுக்கு எமது கழகம் பூரண ஒத்துழைப்பு நல்கும். என்றும் அவர் கூறினார்

### காற்றடித்த

### எட்டு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதாக அவ்வலுவலர்கள் முறையிட்டுள்ளனர்.

மேலும் அவ்வலுவலர்கள் கூறுகையில் தமது அலுவலகத்திற்கு வரும் பத்திரிகையாளர்களைக் கூட இருத்தி வைத்து கதைப்பதற்கு ஒரு

### மட்டக்களப்பு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இணைக்கப்பட்ட பயணிகள் பெட்டி மாகோவில் வைத்து யாழ். தபால் ரயிலில் இணைக்கப்படும்.

சில தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்புக்கு வந்த இந்த அதிகாரியிடம் இந்து இளைஞர் மன்றம் கோரிக்கை விடுத்தபோது அவர் இந்த உறுதி மொழியைக் கூறினார்.

இதேபோல மட்டக்களப்பு இரவு தபால் ரயிலில் திருக்கோணமலைக்கான பயணிகள் பெட்டிகள் போடப்பட்டு அவை கல்லோயாவில் திருக்கோணமலை தபால் ரயிலுடன் இணைக்கப்பட வேண்டும் எனவும் அவரிடம் சுட்டிக் காட்டப்பட்டது.

இதற்கும் ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் இந்து இளைஞர் மன்றத்திடம் தெரிவித்தார்.

வர் கூறிய கருத்தையும் பிரத மர் ஏற்கவில்லை. இவ்வாறு பேச்சுவார்த்தை நடத்தும் போறுப்பை முதல்வர் கருணா

# சாவகச்சேரி உ. அ. அ. பிரிவில் மகாநாட்டு மண்டபம்

(யாழ்ப்பாணம்)

சாவகசசேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனை வளவில் மாநாட்டு மண்டபம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப் படும் என யாழ். அரசாங்க அதிபர் திரு அன்ரன் அல்பிரட் தெரிவித்துள்ளார். சென்ற 14 ஆம் திகதி சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த போது அரச அதிபரிடம் மாநாட்டு மண்டபத்தின் அவசியம் பற்றி சாவகச்சேரி உதவி அரசாங்கஅதிபர் திரு.பு.சுந்தரம் பிள்ளைவேண்டுகோள் விடுத்திருந்தார்.

தற்போது உதவி அரச அதிபரின் சிறிய அலுவலகத்திலேயே கூட்டங்கள் நடைபெறுவதாகவும் சில வேளைகளில் இடப்பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரியவருகிறது.

அத்துடன் நாட்டில் ஏற்பட்ட வன் செயல்களால் பாதிப்படைந்த கைதடி, நாவற்குழிப் பகுதிகளிலுள்ள கட்டிடங்கள், வீதிகள் என்பவற்றின் புனரமைப்புக்கு 9கோடி 30லட்சம் நிதி உள்ளூராட்சிச் சபையினால் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் இவை நடைமுறைப்படுத்தப்பட இருப்பதாகவும் யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

(மு)

மட்ட நிறுவனங்கள், பொது மக்கள் ஆகியோரிடையே ஆராயப்பட்டு தயாரிக்கப்பட வேண்டும் எனப் பொது நிர்வாக அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

பிராந்திய செயலாளர்கள் அலுவலகங்கள் கணக்குகளை வைத்திருப்பதற்கு திறைசேரி அங்கீகாரம் பெறப்படும்.

அத்துடன் கணக்கு நடைமுறைகளைச் சீர்படுத்தவும், அபிவிருத்தி நடவடிக்கைகளை திட்டமிடவும், சகல பிராந்திய செயலாளர்களின் அலுவலகங்களுக்கும் விரிவுரையாளர்கள், பொறியியலாளர்களின் சேவை வழங்கப்படும்.

# யாழ் நகரில் உலக தமிழர் விழா

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் ஆகஸ் 20 ஆம் திகதிவரை யாழ்நகரில் உலகத் தமிழர்விழா கொண்டாடப்படவுள்ளது இவ்விழாவிற்கான ஏற்பாட்டை குரும்பசிட்டி உலகத்தமிழர் ஆராய்ச்சி நிலையத்தினர் மேற்கொண்டுள்ளனர் மாதமொரு நிகழ்ச்சியாக நடைபெறும் இவ்விழாவின் முதலாவது நிகழ்வாக இம்மாதம் 20ஆம்திகதிமாலை 3 மணிக்கு யாழ் வைத்தீஸ்வரக்கல்லூரியில் மொறிசியஸ் தமிழர்தினம் பற்றிய வீடியோ கண்காட்சி இடம்பெறும்

இவ் வீடியோக் கண்காட்சியில் மொறிசியஸ் தீவில் நடைபெற்ற 7 ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் இடம் பெற்றநிகழ்ச்சிகள் கண்காட்சி என்பன காண்பிக்கப்படும்.

மாதம் ஒருமுறை நடைபெறும் மேற்படி விழாவில் இதுவரை வெவ் வேறுநாடுகளில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் பற்றியும் குறித்த நாடுகள் பற்றிய கண்காட்சி புகைப்படங்கள் ஆவணங்கள் போன்ற விபரங்களும் வீடியோ மூலம் காண்பிக்கப்படும்

இவ்விழாவிற்கு அனைத்து தமிழ்பேசும் மக்களையும் கலந்து கொள்ளுமாறு விழா அமைப்பாளர்கள் கேட்டுக் கொள்கிறார்கள்


## மரண அறிவித்தல்

### சிவசுப்பிரமணிய ஐயர் பராசக்தியம்மா

கோப்பாய் தெற்கு தேசிகர் இல்லத்தில் வசிக்கும் சிவசுப்பிரமணிய ஐயர் பராசக்தியம்மா 16-5-90 புதன் கிழமை காலமாகிவிட்டார். இவர் வை. சு. சிவசுப்பிரமணிய ஐயர் அவர்களின் அன்பு மனைவியும், யோக ஜெகதீஸ்வரன், வைத்தியநாதன், சிவயோகநாதன், மதிவதனி, அகிலாண்டஈஸ்வரி, சிவகௌரி ஆகியோரின் தாயாரும், சண்முகதாஸ் அவர்களின் மாமியாரும், கோபாலகிருஷ்ணர், ரஞ்சினி, சித்திரவதனியின் பேர்த்தியாருமாவார். ஈமக்கிரியைகள் 17-5-90 மாலை 4 மணிக்கு நடைபெறும்.

தகவல்:

எஸ். சிவசுப்பிரமணிய ஐயர்

(கணவர்)

R-486



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி. 31- ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 17-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


## கலா தம்பிமுத்து...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீவிர கண்காணிப்பு பிரிவில் வைக்கப்பட்டிருந்தார். ஆனாலும் கணவனின் இறுதிச் சடங்கு கனத்தை மயானத்தில் நடைபெற்ற போது இவர் அம்புலன்ஸ் வண்டியில் மயானத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்தார். சுவாசப்பையில் காயமடைந்த இவர் வெளிக்காற்றில் கொண்டு செல்லப்பட்டதால் உடல் நிலை மோசமடைந்திருக்கலாமென வைத்திய வட்டாரங்கள் கருத்துத்தெரிவித்தன.

நாற்பத்தேழு வயதான திருமதி கலா தம்பிமுத்து கடந்த பத்து நாட்களாக கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேபோல மதுபானம் கடத்தும் வாகனம் நிறுத்தாமல் சென்றால் அதன் சாரதிக்கு ஐயாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படும்.

மதுபான விற்பனை நிலையங்களை திறக்கும் பூட்டும் நேரங்களை மீறுபவர்களுக்கும் ஐயாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படவுள்ளது.

## கொழும்பு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் சம்பந்தமாக எதுவித உருப்படியான நடவடிக்கையும் எடுக்காமல் அரசியல் வெறுமை நிலையை அரசாங்கம் திட்டமிட்டு நீடிப்பதும் புலிகள் இயக்கத் தலைமைப் பீடத்திற்கு ஏமாற்றத்தைக் கொடுத்திருப்பதாகவும் தெரியவருகிறது.

## ரயில்வே ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொழில் நுட்ப அதிகாரிகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

பொதுமக்களுடன் பண்பாகப் பழகாத அதிகாரிகள் ஊழியர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ரயில்வே பகுதி உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## விசமத்தமான...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென்றால் அனைத்து மக்களும் ஒரே பாதையில் ஒரே நேர்வழியில் சென்றால் அவ் இலக்கினை அடைய முடியும்.

மக்கள் சக்தி ஒன்றுபட்டுச் செல்லும் போது ஏற்படுகின்ற தடை ஒரு பாரிய தடையாக தெரியாது. கடந்தகால அனுபவங்கள் இதனை எமக்குப் புகட்டி உள்ளன.

ஒற்றுமையே தேசத்தின் விடிவிற்கு வழிகாட்டி என்பதை ஒவ்வொரு மக்களும் உணரும்போது எம் தேசம் விடிவு பெறும். நாளை இப்படி நடக்கும் என்று பீதியடையாமல் இன்றைய நிலைப்பாடு நாளை இப்படித்தான் நடக்க வேண்டும் என்பதை மக்கள் தீர்மானித்துக் கொள்ளட்டும். வதந்திகளை நம்பி பீதி அடையத் தேவையில்லை. (தி)

## மட்டு - யாழ்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூறினார்.

சில காலத்துக்கு முன்னர் மட்டக்களப்பு டிப்போ மட்டுமே இரவு சேவையை நடாத்தி வந்தது. பின்னர், யாழ்ப்பாண டிப்போ இதற்கு ஒத்துழைப்பு வழங்காததால் மட்டக்களப்பு டிப்போ தனது தனது இரவு சேவையை நிறுத்தியதும் குறிப்பிடத்தக்கது (37)

இங்குகழகத் தலைவர் சலீம் உரையாற்றுகையில்:- 1965ம் ஆண்டிலிருந்து எமது கழகம் தமிழ் மக்களின் பல்வேறு அமைப்புக்களுடனும் இணைந்து செயற்பட்டுவந்துள்ளது - ஆனால் அந்த அமைப்புக்கள் பேச்சளவிலே முஸ்லிம் மக்களின் தேவைகளை, குறைகளை அனுதாபத்தோடு கேட்டனவே தவிர எந்தவொரு செயற்பாடுகளையும் உருப்படியாக நடைமுறைப்படுத்தவில்லை என்பது கடந்த காலங்களில் நாம் கண்டு கொண்ட உண்மையாகும்.

## காற்றடித்த

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காற்று அடித்து கொண்டு நின்ற ஒருவர் பம்புடன் சைக்கிளில் ஓடி தப்பிவிட்டார் என கடை உரிமையாளர் கவலை தெரிவித்துள்ளார். (லோ)

## ஆயுத...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ராஜன் கூறியதாவது;

''பொதுவான ஒரு தலைமைக்குள் சகல மக்களும் ஒன்று திரள வேண்டுமென்ற நோக்கத்தில் சகல சங்கங்கள், அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு வருகிறோம்.

அரசியல், ராணுவ நடவடிக்கைகளால் உலகில் எந்த நாட்டிலும் நடைபெறாத முறையில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அரசியல் கட்சியாக உங்கள் முன்பாக வந்துள்ளோம்'' இவ்வாறு அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் தொழிற் சங்கப் பிரமுகர்: ''இன்று இங்கே காணப்படும் அமைதி ஒரு மயான அமைதியாகும். ஆறாவது சரத்து நீக்கப்படாது விட்டால் பேச்சுவார்த்தைகள் தொடராது. பேச்சுவார்த்தைகள் தோல்வி பெற்றால் இப்பொழுது இருக்கும் இந்த அமைதி நீடிக்குமா என்பது கேள்விக் குறியே'' என்றார்.

வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கப் பிரமுகர்: திரு. ஞானப்பிரகாசடாஸ் ''எமக்குள் இன்று தோன்றியுள்ள இந்த முன்னேற்றத்திற்கும், ஒற்றுமைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளே காரணம்'' என்றார்.

(21)

## வெளிநாடு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாடு சென்று திரும்புவர்கள் மூலமாக 'எயிட்ஸ்' நோய் பரவுவதாக சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆஸ்பத்திரி வஸ்டாரங்கள் தெரிவிக்கின்றன. (37)

நாம் செய்யும் புனித சேவையாகும் என்பதே எமதுநிலைப் பாடாகும்.

அதுமட்டுமல்லாமல் விடுதலைப் புலிகள் இயக்கம் அரசுடன் நடாத்தும் பேச்சுவார்த்தைக்கு இந்தநாட்டில் வாழும் முஸ்லிம் மக்கள் அனைவரும் பூரணஆதரவைநல்கவேண்டும்

## எட்டு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதாக அவ்வலுவலர்கள் முறையிட்டுள்ளனர்.

மேலும் அவ்வலுவலர்கள் கூறுகையில் தமது அலுவலகத்திற்கு வரும் பத்திரிகையாளர்களைக் கூட இருத்தி வைத்து கதைப்பதற்கு ஒரு கதிரை இல்லை என்றார்.

இச்சிறுகைத்தொழில் அலுவலகம் வீடமைப்பு திணைக்கள கட்டிடத்தில் அமைந்திருந்தது. இந்திய இராணுவம் இக்கட்டிடத்தில் குடிகொண்டமையால் 93ஆம் இலக்க கண்டி வீதிக்கு மாற்றப்பட்டு பின்பு தற்போது மீண்டும் வீடமைப்பு திணைக்கள கட்டிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும் (லோ)

சில தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்புக்கு வந்த இந்த அதிகாரியிடம் இந்து இளைஞர் மன்றம் கோரிக்கை விடுத்தபோது அவர் இந்த உறுதிமொழியைக் கூறினார்.

இதேபோல மட்டக்களப்பு இரவு தபால் ரயிலில் திருக்கோணமலைக்கான பயணிகள் பெட்டிகள் போடப்பட்டு அவை கல்லோயாவில் திருக்கோணமலை தபால் ரயிலுடன் இணைக்கப்பட வேண்டும் எனவும் அவரிடம் சுட்டிக் காட்டப்பட்டது.

இதற்கும் ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் இந்து இளைஞர் மன்றத்திடம் தெரிவித்தார்.

## மிதிவெடி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மும் அழியவில்லை. அதிலும் வன்னி மண்ணைவிட்டு அவர்கள் தடயங்கள் விலகுவதற்கு பலகாலம் ஆகலாம். பொதுமக்கள்காலடிகளை ஆராய்ந்து அவதானித்து நிதானித்து எடுத்துவைத்துச் செயலாற்றுங்கள். இதிலும் மீளக் குடியமர்ந்தவர்கள் விழிப்புடன் இருங்கள் என்றார்.

# வீர வேங்கைகள் நினைவு தினம்

(மன்னார்)

வீரவேங்கை லெப்டினன் கேர்ணல் ராதா அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலியும் முள்ளிக் குளத்தில் வீர மரணமடைந்த 11 வீர வேங்கைகளது முதலாம்வருட நினைவு தினமும் எதிர்வரும் 19ஆம் திகதி முதல் 20 ஆம் திகதிவரை முள்ளிக்குளம் லெப்- கேர்ணல் ராதா விளையாட்டரங்கில் நடைபெறும்.

ஏ.சி.செபநாயகம்அரசாங்க அதிபர் மன்னார் கலந்து கொள்ளும் இவ் வைபவத்துக்கு அமிர்தம் குரூஸ் தலைமை தாங்குவார். தமிழீழ விடுதலைப் புலிகள் மன்னார் மாவட்டத் தளபதி சுபன் அவர்கள் கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## நீண்ட . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்தினம் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவுக்கும் ஈ. பி. ஆர். எல். எவ் தூதுக்குழுவுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் விளைவுதான் குண்டுவீச்சு விமானம் வானில் பறந்து நோட்டம் பார்த்ததோ என்றும் பொது மக்கள் பேசிக்கொண்டனர்.


எமது இன்றைய புதிய வெளியீடு!

சத்தியராஜ் கௌதமி ஆனந்தராஜ்

A. V. Mமின்

'உலகம் பிறந்தது எனக்காக'

( ஒறிஜினல் )

குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு கோபுர வீதி,

யாழ்ப்பாணம். Phone: 23665 (B/971)